GOKULAM
ஏப்ரல் 2008 ✧ விலை ரூ.8/- ✧ 80 பக்கங்கள்

கோகுலம்

குழந்தைகளின் குதூகலம்!



சுட்டிகளை அசத்தும்

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


401


402


403


404


405


406


407


408


409


410


411


412


413


414


415


416


417


418


419


420


421


422


423


424


425

கோகுலம்

கல்கி

ஏப்ரல் 2008 மலர் : 26 இதழ் : 3

உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் – பாரதியார்

ஹலோ ஃப்ரண்ட்ஸ்!

என்னடா இது, கோகூ எப்பவும் இரண்டாம் பக்கத்துலதானே பேசும். இப்ப முதல் பக்கத்துலயே 'ஹலோ' சொல்லுதேன்னு ஆச்சர்யமா இருக்கா? மாற்றம், முன்னேற்றம் எப்பவுமே இருக்கணும். புதுசு புதுசா எதை யாவது செய்யணும். அதுதான், நான் ஒரு பக்கம் முன்னேறி வந்திருக்கேன்.

உங்க அபிமான கோகுலம் ஒவ்வொரு மாதமும் புதுமையா வந்து, உங்களை குதூகலப்படுத்தறதைக் குறிக்கோளா வெச்சிருக்கு. அந்த வகையில இந்த மாதம் 'கோகுலம் எக்ஸ்பிரஸ்' ஆரம்பிச்சு இருக்கு. படிச்சுட்டு உங்களோட கருத்துகளை எழுதுங்க. விடுமுறையில ஜாலியா விளை யாடுங்க. அதேசமயம் தினமும் ஒரு மணி நேரமோ, இரண்டு மணி நேரமோ ஒதுக்கி, புதிய விஷயங்களைக் கத்துக்கங்க. அது உங்களை முன்னேற்றும்.

அப்புறம், மாணவப் பத்திரிகையாளர் திட்டத்துக்கு ரொம்ப ஆர்வமா கூப்பன்கள் வந்துட்டிருக்கு. செலக்டானவங்க விவரத்தை அடுத்த மாதம் கோகுலம் பார்த்துத் தெரிஞ்சுக்கங்க. சரியா?

வெயில்ல ரொம்ப சுத்தாதீங்க ஃப்ரண்ட்ஸ்! அடுத்த மாதம் சந்திப் போம்!

அன்புடன்
கோகூ



கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

உதவி ஆசிரியர் :
ஆரணி யுவராஜ்

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், ச.கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623, 2225 1324, 4343 8888.

தொலைநகல் :
044 - 2225 1021

மின்னஞ்சல்:
ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

சந்தா விவரம்:
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ. 96/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 25 யு.எஸ்.டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

குழந்தைகளின் குதூகலம்!

சின்னங்கள்!



இந்தியா - நான்கு சிங்கங்களின் முகப்பு
ஆஸ்திரேலியா - கங்காரு
பங்களாதேஷ் - நீர் அல்லி
பெல்ஜியம் - சிங்கம்
கனடா - வெள்ளை அல்லி
டென்மார்க் - கடற்கரை
பிரான்சு - அல்லி
ஜெர்மனி - தானியப் பூ
ஈரான் - ரோஜா
அயர்லாந்து - இலவங்கமும் மூன்று இலைகளும்
இஸ்ரேல் - மெழுகுவர்த்தி தாங்கி
இத்தாலி - வெள்ளை அல்லி
ஜப்பான் - கிறிசாந்திமம் (பூச்செடி)
நார்வே - சிங்கம்
பாகிஸ்தான் - பிறை
ஸ்பெயின் - கழுகு
ஸ்ரீலங்கா - சிங்கம்
துருக்கி - பிறையும் நட்சத்திரமும்
இங்கிலாந்து - ரோஜா
USA (அமெரிக்கா) - தங்கக் கழி

- ப.ஜெயக்குமார்,
உறுப்பினர் எண்: 62
காமராஜ் மேல்நிலைப் பள்ளி,
நம்பியூர்



என்ன? என்ன?

1. பார்க்க முடிந்த நூல், தைக்க முடியா நூல் - அது என்ன?

2. அடித்தாலும், உதைத்தாலும் அழ மாட்டான் - அவன் யார்?

3. பூமியிலே வளராத மரம், கிளை உண்டு, இலை இல்லை - அது என்ன?

4. கிட்ட இருக்குது பட்டணம்; எட்டித்தான் பார்க்க முடியலை - அது என்ன?



5. பச்சை, வெள்ளை, கறுப்பு பக்குவமானால் சிவப்பு - அது என்ன?

விடை:

1. சிலந்தி வலை, 2. பந்து, 3. மான் கொம்பு, 4. முதுகு, 5. வெற்றிலை, சுண்ணாம்பு, பாக்கு

- பழ.உண்ணாப்பிரியா,
உறுப்பினர் எண்: 239,
ஆறாம் வகுப்பு,
சீதாதேவி கரோடியா ஹிந்து
வித்யாலயா, கிழக்கு தாம்பரம்





காலண்டர்!

ரோமபுரியில் முன்பு மாதா மாதம் ஒருவர் தெருவுக்குத் தெரு வந்து மாதப் பிறப்பைக் கூவி அறிவிப்பார். ரோம் மொழியில் இதற்கு 'கலோர்' என்பார்கள். கலோர் என்ற சொல்லே 'காலண்டர்' என மாறியது.

- மு.சிவரஞ்சனி, உறுப்பினர் எண்: 179,
ஸ்ரீ மகாதேவ குருஜி மெட்ரிக்
மேல்நிலைப் பள்ளி, வலங்கைமான்



எடை பார்க்கலாமா?

கோளுக்கு கோள் ஈர்ப்பு முடுக்கம் மாறுபடுவதால் எடையும் மாறும். ஒருவரின் எடை பூமியில் நூறு கிலோ கிராம் எனில் பிற கோள்களில் பின்வருமாறு இருக்கும்.

புதன் - 38 கி.கி.,
வெள்ளி - 91 கி.கி.,
செவ்வாய் - 38 கி.கி.,
வியாழன் - 253 கி.கி.,
சனி - 107 கி.கி.,
யுரேனஸ் - 92 கி.கி.,
நெப்டியூன் - 118 கி.கி.,
புளூட்டோ - 10 கி.கி.

- பி.கே.ஷ்யாம்,
உறுப்பினர் எண்: 7, கும்பகோணம்



● உலக அளவில் பால் உற்பத்தியில் முதலிடம் வகிப்பது இந்தியா.

● பூஜ்ஜியத்தை கண்டுபிடித்த நாடு இந்தியா.

● கரும்பை முதன்முதலாக பயிரிட்ட நாடு இந்தியா.

● உலகிலேயே சினிமா அதிகம் தயாரிக்கும் நாடு இந்தியா.

● உலகிலேயே அதிகம் பேருக்கு வேலை வாய்ப்பு தரும் நிறுவனம் இந்திய ரயில்வேதான்.

-இரா. ஜனனி, உறுப்பினர் எண்: 181,
ஐந்தாம் வகுப்பு,
ஸ்ரீ ராமகிருஷ்ணா நர்சரி பள்ளி, ஏரகுடி

"நீ எத்தனாவது ரேங்க் எடுக்கிறே?"

"பத்துக்குள்ளே எடுப்பேன் மாமா."

"அப்ப பர்ஸ்ட் ரேங்க் எடுக்க மாட்டியா?"

"பத்துக்குள்ளேதானே மாமா பர்ஸ்ட் ரேங்க் இருக்கு."

- அதிபன் அன்புமணி,
உறுப்பினர் எண்: 120,
நான்காம் வகுப்பு,
ஈரோடு



ஹா... ஹா... ஹா...

"தேர்வு நெருங்குகிறது - இது என்ன காலம்?"

"ஆபத்து காலம், சார்!"

- டி.தாமினி, உறுப்பினர் எண்.186,
ஆறாம் வகுப்பு, மஹரிஷி வித்யா
மந்திர் மெட்ரிக் பள்ளி,
திருவண்ணாமலை



நீங்கள் கோகுலம் சிறுவர் சங்கத்தின் உறுப்பினராகிவிட்டீர்களா? உங்களுக்காகவே இந்த **'உறுப்பினர் பக்கம்'** பகுதி. இதில் துணுக்கு, அறிவியல் செய்திகள், கவிதை, குட்டிக் கதை என எதை வேண்டுமானாலும் எழுதியனுப்பலாம். பிரசுரமானால் பரிசு உண்டு. உங்கள் பெயர், முகவரியுடன் மறக்காமல் உறுப்பினர் எண்ணையும் குறிப்பிடுங்கள். அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர், கோகுலம்
(உறுப்பினர் பக்கம்)
47-NP., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032

போட்டி

பரிசு ரூபாய் 1000/-

இங்கே ஐந்து கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. விடைகளை நீங்கள் எங்கும் தேடிச் செல்ல வேண்டாம். இதே இதழில்தான் உள்ளன. அவற்றைக் கண்டு பிடித்து எழுதுங்கள். கூப்பனையும் பூர்த்தி செய்து இந்தப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்கள். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

முடிவு தேதி 15.4.2008

அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர், கோகுலம்,
(பரிசுப் போட்டி)
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32



விடையைச் சொல்;பரிசை வெல் - 10

1. மருத்துவ உலகின் முதல் கிருமிக்கொல்லி மருந்து ....
2. சூப்பர்மேன் பிறந்த கிரகத்தின் பெயர் ....
3. தனுஜனுக்கு வில் வித்தையைக் கற்றுத் தந்தவர் ....
4. சிண்டுவை ஏமாற்றியது யார்? ....
5. சுண்டைக் காயிலுள்ள சத்து எது? ....

என் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

....

'காமிக்ஸ்' என்கிற படக்கதைகள் சுட்டிகளை மட்டுமல்ல, பெரியவர்களையும் கவரும். காரணம், அவற்றில் வருகிற சூப்பர் ஹீரோக்கள். அவர்களின் சாகஸங்கள்! அந்த சூப்பர் ஹீரோக்களைப் பற்றிய சுவையான விஷயங்களைப் பார்ப்போமா?

சூப்பர்மேன் (Superman)

'க்ரிப்டான்' என்ற கிரகத்தில் பிறந்தவர் சூப்பர்மேன். விஞ்ஞானியான அவர் அப்பா, அவரை பூமியில் சேர்க்கிறார். அங்கே 'கன்ஸாஸ்' நகரத்தைச் சேர்ந்த விவசாயத் தம்பதிகளால் 'கிளார்க் கென்ட்' என்ற பெயரில் வளர்கிறார் சூப்பர்மேன். பின் தம்முடைய அதீத சக்திகளால் மனிதர்களுக்கு நன்மை செய்கிறார். துப்பாக்கிக் குண்டுகளைவிட வேகமாகச் செல்வார். உயரமான கட்டடங்களைத் தாண்டுவார். தலைக்குமேல் காரைத் தூக்குவார். 'க்ரிப்டோனெட்' என்ற ஒரே கதிரியக்க உலோகம்தான் சூப்பர்மேனைச் செயலிழக்க வைக்கும். இது க்ரிப்டான் கிரகத்தைச் சேர்ந்தது

கேப்டன் மார்வெல்

பெக் (Beck) என்ற ஓவியரால் 1939ல் உருவாக்கப்பட்ட பாத்திரம். எழுதியவர் 'பில் பார்க்கர்'. 'பில்லி பாட்ஷன்' எனும் இளைஞர் வானொலியில் பணியாற்றுகிறார். எல்லோருக்கும் நல்லது செய்ய நினைப்பவர். மந்திரவாதி ஷெலாம், பில்லிக்கு புதிய சக்தியை அளிக்கிறார். பில்லி, 'ஷெலாம்' என்று கூறினால் ஒரு மந்திர மின்னல் அவரைத் தாக்கி

சுட்டிகளை சூப்பர்





அபூர்வ பலம் வரும். அவரே கேப்டன் மார்வெல். முதன்முதலாக திரைப்படமாக உருவான காமிக்ஸ், கேப்டன் மார்வெல் தான்! படம் 'தி அட்வென்சர்ஸ் ஆஃப் கேப்டன் மார்வெல்'.



ஸ்பைடர்மேன்

'மார்வல் காமிக்ஸ்' நிறுவனம் மூலம் 1962-ஆம் வருடத்திலிருந்து புத்தகமாக வெளி வருகிறது ஸ்பைடர்மேன்.

'பீட்டர் பார்கர்' ஓர் அனாதை. அத்தையுடன் வசிக்கிறார். விஞ்ஞானியும் புகைப்படக்காரரு மான அவரை, ஆராய்ச்சிக்கூடம் ஒன்றில் ஒரு சிலந்தி கடித்துவிடுகிறது. அது கதிரியக்கத்தால் பாதிக்கப்பட்ட சிலந்தி! இதன் காரணமாக பீட்

அசத்தும் ஹீரோக்கள்!







டர் விசேஷ சக்திகள் பெறுகிறார். சுவரிலும் சுலபமாக ஏறுகிற சிலந்தியின் தன்மைகளைப் பெறுகிறார். சிலந்தி வலையை உருவாக்கி, எந்தக் கஷ்டமுமின்றி கட்டடங்களைத் தாவுவார்.

பேட்மேன்

சூப்பர்மேன் பெரும் வெற்றி பெற, அதற்குப் போட்டியாக பேட்மேன் உருவானது. லியனார்டோ டாவின்ஸி, 'ஆர்னி தோப்டர்' என்ற பறக்கும் கருவியை வரைந்திருப்பார். பெரிய வெளவாலுக்கு உள்ளது போன்ற கைகளைக் கொண்ட அந்தக் கருவிதான் பேட்மேனை உருவாக்க முக்கிய காரணம்.

1939-ல் அறிமுகமானவர் பேட்மேன். இவர் பணக்காரத் தொழிலதிபர். சாகசங்களில் ஆர்வம் கொண்டவர். பிறருக்கு உதவும் மனம். குழந்தையாக இருக்கும்போது பெற்றோர் கொல்லப்படுவதைப் பார்க்கும் பேட்மேன், கெட்டவர்களை எதிர்ப்பதற்காக வெளவால் போன்ற உடை அணிகிறார். பிற சூப்பர் ஹீரோக்கள் மாதிரி பேட்மேனுக்கு எந்தச் சக்தியும் கிடையாது. புத்தியையும் உடல் சக்திகளையும் பயன்படுத்திதான் ஜெயிப்பார். 'ராபின்' என்ற உதவியாளர், 'ஆல்ஃபிரட் பெனி வொர்த்' என்ற பட்லர் பேட்மேனுக்கு உதவி செய்வார்கள்.



* டின்டின்

அயன்மேன்

'டேல்ஸ் இன் சஸ்பென்ஸ்' எனும் இதழில் அயன்மேன் கதைகள் வெளியாகின. நியூயார்க்கில் பிறந்தவர் 'ஆட்டனிஸ் டார்க்'. மின் பொறியியலில் இவருக்கு இஷ்டம். பெற்றோர்கள் கார் விபத்தில் இறந்து, தனது 21-வது வயதில் தாமே நிறுவனத்தை நடத்துகிறார். வியட்நாம், ஆப்கானிஸ்தான் என உலகின் பல இடங்களுக்கு விசிட் செய்வார்.

இப்படி அபூர்வ சக்தி மற்றும் சாகஸங்களால் கவரும் கதாபாத்திரங்கள் ஒரு பக்கம் கொடி கட்டிப் பறக்கும் அதேசமயம், குட்டீஸ்களை ஈர்க்கும் நகைச்சுவை நாயகர்கள், மறுபக்கம் வலம் வருகிறார்கள். அவர்களில் புகழ்பெற்ற ஹீரோக்கள்...

மிக்கி மெளஸ்

சுமார் 150 திரைப்படங்களின் கதாநாயகன் 'மிக்கி மெளஸ்'. மிக்கி மெளஸுக்கு திரைப்படங்களில் வால்ட் டிஸ்னியே முதலில் குரல் கொடுத்திருந்தார். 'மார்டிமர் மெளஸ்' என்றுதான்

நியூயார்க் நகரத்தில் பிறந்த 'க்ரிஸ்டோஃபர் ரீவ்ஸ்' 1978-ம் வருடம் 'ரிச்சர்ட் டோனர்' இயக்கிய படத்தில் சூப்பர்மேனாக நடித்தார். ரீவ்ஸுக்கு நடிகர், திரைக்கதை எழுத்தாளர், இயக்குநர், தயாரிப்பாளர், குதிரைப்பந்தய வீரர் என்று பல முகங்கள் உண்டு.

கிரேக்கச் சிலை போன்ற முகமும், அற்புதமான உடற்கட்டும் கொண்ட இவர், ஒரு நாள், குதிரையேற்றத்தின்போது தவறி விழுந்தார். தலையில் பலத்த அடிபட்டது. இதனால் சக்கர நாற்காலியில் தான் இவரது வாழ்க்கை கழிந்தது. அதற்காக கலங்கவில்லை.

வால்ட் டிஸ்னி இதற்குப் பெயர் வைத்திருந்தார். அவர் மனைவி மிக்கி மௌஸ் என்றழைக்க, அதுவே நிரந்தரமானது.

டிஸ்னியின் அலுவலகத்துக்கு ஓர் எலி அடிக்கடி வரும். டிஸ்னி அளிக்கும் உணவைச் சாப்பிடும். எனவேதான் எலியைக் கதாநாயகனாக்கினார்.



* இந்திய ஹீரோ

'ப்ளூட்டோ' என்ற வில்லனே சண்டையிடுவான்.

இவை எல்லாமே வெளிநாட்டு கதாபாத்திரங்கள். அந்த அளவுக்கு இந்தியாவில் காமிக்ஸ்கள், ஹீரோக்கள் இல்லை. எனினும், வெற்றி பெற்ற சிலவும் உண்டு.

டின்டின்

தலைமுடியின் ஒரு பகுதி தூக்கிக் கொண்டிருக்கும். கண்களாக வெறும் புள்ளிகள்தான். புருவங்களாக வளை கோடுகள். இவற்றைக் கொண்டே பல வித உணர்ச்சிகளை டின்டின்னால் காட்ட முடிந்தது. இது வெளியானது 1929ல். சீனச் சிறுவனான டின்டின், ஒரு டீன்-ஏஜ் பத்திரிகையாளன். செல்ல நாய் ஸ்நோயி, டின்டின்னுக்கு சில சமயம் உதவியும், சில சமயம் உபத்திரவமும் செய்யும்!

பாப்பாயி

பாப்பாயி பலவான் அல்ல. ஆனால் தன்னிடம் சண்டைக்கு வரும் வில்லன்களைத் தாக்கும்முன் பசலைக் கீரை சாப்பிடுவான். உடனே அசுர பலம் வந்து விடும். பாப்பாயியோடு பெரும்பாலும்

'ஆபிட் ஸுர்த்தி' என்பவர் 'டம்புஜி' என்ற பாத்திரத்தை உருவாக்கினார். இதே கார்ட்டூனிஸ்ட் உருவாக்கிய மற்றொரு பாத்திரமான 'பகதூர்' மிகவும் புகழ் பெற்றது.

1967ல் தொடங்கிய 'அமர் சித்ர கதா' கதைகளை காமிக்ஸ் வகையில் சேர்க்கலாம். அமர் சித்ர கதாவின் வெற்றியைத் தொடர்ந்து டைமண்ட் காமிக்ஸ், டரீம் லேண்டு, ஜெய்கோ போன்ற புத்தகங்கள் வெளியாகின.

அமர் சித்ர கதா நிறுவனம் வெளியிட்டு வரும் இதழான டிங்கிளின் சுப்பாண்டி, தந்த்ரி-த-மந்த்ரி போன்ற வேடிக்கையான பாத்திரங்களும்கூட பிரபலமானவைதான்!



2004-ஆம் வருடம் அக்டோபர் 10-ல், தாம் இறக்கும்வரை பலவித சமூக சேவைகளில் ஈடுபட்டார். சினிமாவில் மட்டுமின்றி சமூக சேவையால் நிஜ வாழ்க்கையிலும் சூப்பர் மேனாகத் திகழ்ந்தார் ரீவ்ஸ்!





வல்லபர் என்றொரு முனிவர் விந்திய மலையிலேயே வசித்து வந்தார். வில் வித்தையில் அசகாய சூரர். அவரிடம் வில் வித்தையினை கற்றுத் தேர்ந்தவர்கள் ஊருக்குள் சென்று பலரிடமும் இதைப் பற்றிச் சொல்ல, முனிவர் புகழ் பாரெங்கும் பரவியது.

தூரத்து நகரத்தில் வாழ்ந்து வந்த தனுஜன் என்ற இளைஞனுக்கு வல்லபர் பற்றிய செய்தி தெரிந்தது. தனுஜன் ஆயிரம் வித்தைகள் கற்றவன். ஆனால் ஒன்றிலும் முழுமையான தேர்ச்சியற்றவன். எதையெடுத்தாலும் சலித்துக் கொள்வான். பொறுமையே கிடையாது. 'எனக்கு எந்த வித்தையும் வராது' என்று முணுமுணுப்பான்.

'வல்லபரிடம் அனுப்பினால் வில் வித்தையில் வீரனாக்குவாரே' என்று எண்ணிய தனுஜனின் தாய், அவரிடம் அனுப்ப ஏற்பாடு செய்தாள்.

தனுஜன் நெடுந்தூரம் பயணம் செய்து விந்திய மலையிலிருந்த வல்லபரின் ஆசிரமத்தை அடைந்தான். அவனை வரவேற்று உபசரித்தார் வல்லபர்.

தனுஜன் ''ஐயா எனக்கு வில் வித்தை கற்றுக் கொடுங்கள். அதை நான் நன்கு கற்க வேண்டும்'' என்றான்.


''ஆஹா! அதற்கென்ன பேஷா கற்றுத் தருகிறேன். முதலில் கை, கால், முகம் கழுவி இறைவனை நமஸ்கரித்து விட்டு வா'' என்றார்.

எல்லாம் முடிந்த பின் பாடம் துவங்கியது. அருகில் இருந்த மரத்தில் வட்டம் ஒன்று வரைந்து நடுவில் புள்ளி வைக்

உனக்கென

வி.ஜெயலெட்சுமி

"நீயும்
உனக்கென்று ஒரு
வழியை வகுத்துக்கொள்.
நன்கு பழகிவிட்டால் பிறகு
இந்த முதல் வழி
தேவைப்படாது"



ஒரு வழி!

விடையைச் சொல்; பரிசை வெல்-8ல் கலந்துகொண்டவர்களில் பெரும் பாலானோர் சரியான விடைகளை எழுதி அசத்திவிட்டீர்கள்! பரிசுத் தொகையான ஆயிரம் ரூபாய் குலுக்கல் மூலம் பத்து குட்டீஸ்களுக்கு தலா ரூ.**100/-** வீதம் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

சரியான விடைகள் :

1) விதூஷகர் விமலன் 2) தஞ்சாவூர் 3) 1888 4) கம் அராபிக் 5) உத்திரபிரதேசம்

பரிசு பெறுவோர் :

1. **எஸ்.அனிஷா - கோம்பை**
2. **ப.கிருபாகரன் - செலவடை**
3. **ஸ்ரீ.பத்மஸ்ரீ - சென்னை**
4. **சி.சுகந்தன் - இராணிப்பேட்டை**
5. **எம்.அனிஸா பேகம் - கோபி**
6. **என்.ஆர்.ரஞ்சனி - சென்னை**
7. **மு.அஜய்கௌதம் - ஈரோடு**
8. **ர.ஹரிஹரன் - மணலி**
9. **எஸ். பூர்ணவல்லி - கொடியாலம்**
10. **ப. கீர்த்தனா - திருச்சி**

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்; கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி!



கப்பட்டிருந்தது. இவன் கையில் வில் அம்பைக் கொடுத்து, ''அதோ அந்தப் புள்ளியை நோக்கி அம்பு எறி பார்க்கலாம்'' என்றார் வல்லபர்.

தனுஜன் பலமுறை முயற்சித்தான். ஒருமுறைகூட வெற்றி கிட்டவில்லை.

இப்படிப் பல நாட்கள் கழிந்தன. திறமையைவிட சலித்துக்கொள்ளும் பழக்கம் உள்ளவனாகையால் அவனது திறமையை சலிப்பு விழுங்கிச் சாப்பிட்டுக் கொண்டிருந்தது. சலிப்புடன் தொடங்கும் எதுதான் வெற்றி காணும்? இவற்றையெல்லாம் வல்லபர் கவனிக்கத் தவறவில்லை.

அன்று வழக்கம்போல் தனுஜன் வகுப்புக்கு வந்ததும், வல்லபர், ''தனுஜா இன்று உன்னை ஓர் இடத்துக்கு அழைத்துப் போகிறேன். என்னுடன் வா'' என அழைத்துச் சென்றார்.

அவர் அழைத்துச் சென்றது வேறு ஒரு மாணவனிடம். ஒரு சோலையினுள் அவன் வில் வித்தை பழகிக் கொண்டிருந்தான். சுற்றிலும் மரங்கள்! பல மரங்களில் வட்டமான குறியும், குறியின் நடுவே உள்ள புள்ளியில் சரியான இலக்கை எட்டிய அம்புகளும் இருந்தன. தனுஜனுக்கு வியப்பு தாங்கவில்லை!

'இவனுக்கு மட்டும் எப்படி இப்படி?' என வியந்தான்.

''ரத்னாகரா, இவன் தனுஜன். உனது சக மாணவன். உன் வெற்றியின் ரகசியத்தை இவனுக்கும் சொல்'' என்றார் வல்லபர். ரத்னாகரன் கூறலானான்.

''தனுஜா, வேறொன்றுமில்லை. நானும் உன்னைப் போல சாதாரண மாணவன்தான். இதோ பார்க்கிறாயே எல்லா இலக்குப் புள்ளிகளிலும்

அம்புகள் செருகப்பட்டிருப்பதை. எப்படி வந்தது தெரியுமா? நான் எனது போக்கில் அம்பு எறிவேன். அது பாய்ந்து நின்றதும், அருகில் சென்று அதைச் சுற்றி வட்டமிடுவேன். இப்படிப் பல தடவை செய்ததும் அதைப் பார்த்துப் பார்த்து எனக்குள் மகிழ்ச்சி கொப்பளிக்கும், ஆர்வம் அதிகமாகும்.

அதோ மறுபுறம் பார். அங்குள்ள மரங்களிலும் புள்ளி இலக்குகளில் அம்பு பாய்ந்திருக்கிறதல்லவா? இவையெல்லாம் முதலில் வட்டம் புள்ளி வைத்து, அப் புள்ளியில் சரியாக எறியப்பட்ட அம்புகள். மனத்தை உற்சாகப்படுத்த, முதல் வழிமுறை. வெற்றியடைய இரண்டாம் வழிமுறை. எனக்கென்னவோ இப்படிச் செய்தால்தான் வெற்றி கிட்டுகிறது. நீயும் உனக்கென்று ஒரு வழியை வகுத்துக்கொள். நன்கு பழகிவிட்டால் பிறகு இந்த முதல் வழி தேவைப்படாது'' என்றான்.

தனுராஜனுக்குத் தன்னம்பிக்கை பிறந்தது. அன்றிலிருந்து பெரிய பெரிய வட்டம் வரைந்து அதன் நடுவில் உள்ள புள்ளிகளில் அம்புகளை எய்தான். பிறகு, வட்டத்தைச் சிறியதாக்கினான். சலித்துக் கொள்வதை நிறுத்தினான். வெற்றிக்கு முதல்படியாகத் தோல்வியை ஏற்றுக் கொண்டான்.


பயிற்சி முடிந்து வீடு திரும்பியபோது தனுராஜன் சிறந்த வீரனாக மாறியிருந்தான். மன்னர் படையில் வில் வீரனாகச் சேர்ந்தும் புகழ் பெற்றான். •



ஹலோ டாக்டர் ஸ்பீக்கிங்-3

ஹலோ, கோகுலம் குட்டீஸ்! நலம்தானே? உலகில் முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்ட கிருமிக்கொல்லி மருந்து (Antibiotic) பெனிசிலின்! இதைக் கண்டுபிடித்தவர் 'சர் அலெக்ஸாண்டர் ஃபிளெமிங்' (Sir Alexander fleming).

இவர் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர். அக்காலத்தில் 'தடுப்பூசிகளின் முன்னோடி' என்று பெயர் பெற்றிருந்த 'சர் அல்ரோத் ரைட்' என்பவரிடம் உதவியாளராகச் சேர்ந்து மருத்துவ ஆராய்ச்சிகளை மேற்கொண்டார்.



பலே

முதல் உலகப் போரின்போது 'ராயல்' இராணுவ மருத்துவப் பிரிவில் பணிபுரிந்தார். அப்போது பல்லாயிரக்கணக்கான போர் வீரர்களுக்குச் சிகிச்சை அளிக்கும் வாய்ப்பு கிடைத்தது. போரில் காயமடைந்த வீரர்கள், அவர்களுக்கு ஏற்பட்டிருந்த காயங்களில் சீழ் பிடித்துப் புரையோடி இறந்தனர். ஏனெனில், அந்தக் காயங்களில் சீழ் பிடிக்கக் காரணமாக இருந்த பாக்டீரியா கிருமிகளைக் கொல்வதற்கு எவ்வித கிருமிக்கொல்லி மருந்தும் இல்லை. இந்த அவல நிலையை எப்படியாவது களைய நினைத்த ஃபிளெமிங், 1922ல் 'லைசோசைம்' என்ற கிருமி நாசினியைக் கண்டுபிடித்தார். ஆனால், இதற்கு பாக்டீரியாக்களைக் கொல்லும் அளவு ஆற்றல் இல்லை. என்றாலும், ஃபிளெமிங் மனம் தளரவில்லை. தொடர்ந்து தம் ஆய்வுகளை அதிகப்படுத்தினார்.

1928ஆம் ஆண்டு ஃபிளெமிங் 'ஸ்டெஃபில்லோகாக்கஸ்' எனும் ஒருவகை பாக்டீரியா கிருமிகள் பற்றி ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தார். ஃபிளெமிங் தம்முடைய ஆராய்ச்சிக் கூடத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்வதில்லை. ஆராய்ச்சி முடிவுகளை ஒழுங்குபடுத்தி வகைப்படுத்துவதிலும் முறையில்லை. அவரது ஆராய்ச்சிக்கூடம், போர் நடந்து முடிந்த போர்க்களம் போலத்தான் அலங்கோலமாக இருக்கும்.

ஒருமுறை தாம் வளர்த்து வந்த 'ஸ்டெஃபில்லோகாக்கஸ்' கிருமிகள் அடங்கிய கண்ணாடித் தட்டுகளை

டாக்டர் கு.கணேசன்



ஆராய்ச்சி அறையில் அப்படியே போட்டுவிட்டு நீண்ட விடுப்பில் சென்றுவிட்டார். விடுமுறை முடிந்து அறைக்குத் திரும்பியபோது அறையில் துர்நாற்றம் வீசியது. ஃபிளெமிங் அந்தக் கண்ணாடித் தட்டுகளைக் கையில் எடுத்துப் பார்த்தார். அவற்றில் பூஞ்சைக் காளான்கள் வளர்ந்திருந்தன. அறையில் துர்நாற்றம் வீசியதற்குக் காரணம் அந்தப் பூஞ்சைகள்தான். (கெட்டுப் போன ரொட்டியில் திட்டுத் திட்டாக லேசான பச்சை நிறத்தில் காணப்படுமே... அதுதான் பூஞ்சைக் காளான்.)

ஃபிளெமிங், பூஞ்சைக் காளான் பாதித்த அந்தக் கண்ணாடித் தட்டுகளை குப்பையில் போட நினைத்தார். ஆனால் நம் ஊரில் செய்வது போல உடனே அவற்றை குப்பையில் போட முடியாது. அந்தப் பூஞ்சைக் கிருமிகளையும் பாக்டீரியா செய்வதைக் காண்பிப்பதற்காக, குப்பையில் போட நினைத்த கண்ணாடித் தட்டுகளை வெளியில் எடுத்தார். என்ன ஆச்சரியம்! ஏறத்தாழ எல்லா கண்ணாடித் தட்டுகளிலும் அந்த 'ஸ்டெஃபில்லோகாக்கஸ்' கிருமிகள் அப்படியே இருக்க, ஒரு பகுதியில் மட்டும் அந்தக் கிருமிகள் முழுவதுமாக இறந்திருந்தன.

உடனே அந்தப் பகுதியில் இருந்த பூஞ்சைக் காளானை எடுத்து ஆராய்ச்சி செய்தார். அது 'பென்சிலின் நொட்டேட்டம்' எனும் பூஞ்சை என்றும், அதற்கு பாக்டீரியாக்களைக் கொல்லும் ஆற்றல் உள்ளது என்றும் தெரிந்துகொண்டார். தொடர்ந்து ஆராய்ச்சிகள் செய்து



ஃபிளெமிங்!

கிருமிகளையும் சுத்தம் செய்த பின்புதான் குப்பையில் போட முடியும். அதனால் கிருமிகளைக் கொல்லும் ஒரு திரவத்தில் அந்தக் கண்ணாடித் தட்டுகளை மூக்கி வைத்தார்.

சில நாட்கள் கழித்து ஃபிளெமிங்கின் நண்பர் ஒருவர் அவரைக் காண வந்தார். அந்த நண்பரிடம் தாம் ஆராய்ச்சி

'பென்சிலின் நொட்டேட்டம்' பூஞ்சையிலிருந்து ஒரு கிருமிக்கொல்லி மருந்தைக் கண்டுபிடித்தார். அதற்கு 'பெனிசிலின்' என்று பெயரிட்டார்.

இவ்வாறு ஃபிளெமிங் தற்செயலாக ஒரு விபத்து போல் கண்டுபிடித்த பென்சிலின் மருந்துதான் மருத்துவ உலகில் முதல் கிருமிக்கொல்லி மருந்து. இது, அக்காலத்தில் நிமோனியா, மூளைக்

மருத்துவ மேதைகள்
வில்லியம் ஹார்வி



இவர் இங்கிலாந்து மருத்துவர். இவர் வாழ்ந்த காலம் 1578 -1657. அக்காலத்தில் மனித உடலில் ரத்தம் கல்லீரலில் உற்பத்தியாகி, இதயத்துக்கு எடுத்துச் செல்லப்படுகிறது என்று ஒரு கருத்து இருந்தது. இது தவறு என்பதை வில்லியம் ஹார்வி (William Harvey) நிரூபித்தார். இதயமும் அதன் துணை உறுப்புகளான இரத்தக் குழாய்களும் இணைவதால் 'இதயச் சுற்றோட்ட மண்டலம்' உருவாகிறது என்றும், இதயம் ஒவ்வொரு முறை துடிக்கும்போதும் ரத்தம், தமனி ரத்தக் குழாய்கள் மூலம் உடலுக்கு எடுத்துச் செல்லப் பட்டு, சிரை ரத்தக் குழாய்கள் மூலம் மீண்டும் இதயத்துக்கே திரும்புகிறது என்றும் 1628-ஆம் ஆண்டில் கண்டறிந்தார். எப்படி நம் வீட்டில் அடிகுழாய்த் தண்ணீரை ஒரு பம்ப் மூலம் மாடியில் உள்ள தொட்டிக்கு ஏற்றுகிறோமா, அப்படியே இதயமும் ஒரு 'பம்ப்' போல செயல்பட்டு, உடல் முழுவதிலும் உள்ள எல்லா பாகங்களுக்கும் இரத்தத்தை விநியோகிக்கிறது என்று விளக்கினார். இதயத்துடிப்பு, நாடித் துடிப்பு மற்றும் இதயத்தின் பணிகளையும் இவர்தான் விளக்கினார். எண்ணற்ற விலங்குகள், மனிதப் பிரேதங்களைப் பரிசோதித்து, இதயத்தில் உள்ள வால்வுகளின் செயல்பாடுகளைக் கண்டறிந்தார். தமனி ரத்தக் குழாய்களில் வால்வுகள் இல்லை என்பதையும் சிரை ரத்தக் குழாய்களில் வால்வுகள் ஏன் உள்ளன என்பதையும் தெளிவுபடுத்தினார். இதயத்துக்கு வரும் அசுத்த ரத்தம் சுத்தமடைவதற்காக அங்கிருந்து நுரையீரலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, சுத்தமடைந்து, மீண்டும் இதயத்துக்குத் திரும்புகிறது என்கிற உண்மையைக் கண்டறிந்து சொன்னவரும் இவரே! இதனால் உலகில் முதல்முறையாக உடற்செயல்கூறு இயலுக்கு அடித்தளம் அமைத்த விஞ்ஞானி என்று இவர் அழைக்கப்படுகிறார்!

காய்ச்சல், விஷக்காய்ச்சல், 'டிப்தீரியா' என்ற தொண்டை அடைப்பான் போன்ற பல நோய்களைத் தீர்க்கும் மருந்தாக அமைந்தது.

அதுமட்டுமல்ல, 1941ல் நடந்த இங்கிலாந்து போரின்போது பல்லாயிரக்கணக்கான போர் வீரர்களைக் காப்பாற்ற இந்த மருந்து உதவியது. இதன்மூலம் ஃபிளெமிங்கின் கனவு நனவானது. ஃபிளெமிங்கின் இந்த அற்புதக் கண்டுபிடிப்புக்காக 1945ல் இங்கிலாந்து மன்னர் அவருக்கு நோபல் பரிசு வழங்கினார். என்ன குட்டீஸ், பெனிசிலின் பிறந்த கதை சுவாரஸ்யமாக இருந்ததா? சரி, அடுத்த மாதம் இரத்த அழுத்தமானி (Sphygmomanometer) யைப் பற்றி தெரிஞ்சுக்கலாம்!

புள்ளிகளை இணையுங்கள்!



1 முதல் 65 வரையிலான
புள்ளிகளை இணைத்தால்
இங்கே இருப்பது யாரென்று தெரியும்!

குட்டீஸ் கோகுலம்



கிளியும் மயிலும்!

- வளர்கவி

பூங்கா வொன்றில் கூண்டுக்குள்
புள்ளி மயில் வாழ்ந்ததாம்
அதற்கு அடுத்த கூண்டினிலே
அழகிய கிளியும் இருந்ததாம்!

இரண்டும் இனிய நண்பர்கள்
இருந்தும் கிளிக்கோ வருத்தமாம்
மயிலை அழைத்துக் கிளியும்தன்
மனதின் வருத்தம் சொன்னதாம்!

''அக்கா உன்னைப் போலத்தான்
அழகாய் நானும் இருக்கிறேன்
சத்தத் தமிழில் பேசியே
சோம்பல் இன்றி இருக்கிறேன்

இருந்தும் என்ன பயன் அக்கா?
உன்னைத் தானே இந்நாட்டின்
தேசப் பறவை என்கின்றார்
என்னை ஏனோ வெறுக்கின்றார்?''

என்று கேட்ட கிளி பார்த்து,
''குட்டித் தங்கைக் கிளிப்பெண்ணே!
உன்னிடம் சிறிய குறையுண்டு
சொல்வேன் நீயும் கேட்பாயே

உன்னிடம் சொல்லும் ரகசியம்
தன்னால் வெளியே சென்றிடும்
சொன்ன ரகசியம் தங்காது
உளறி விடுவாய் என அஞ்சி

உன்னை ஒதுக்கி விட்டார்கள்,
என்னைத் தேர்வு செய்தார்கள்!''
என்று மயிலும் சொன்னதாம்
கிளியும் ஒத்துக் கொண்டதாம்!

ப.இனியன்

சின்னச் சின்ன வண்டு
சிறிய கறுப்பு வண்டு
பொன்போல் புள்ளி வண்டு
பூவில் மொய்க்கும் வண்டு!

கூவிக் கூவித் திரியும்
கொடியைச் செடியை அறியும்
பூவைத் தேடிப் பிடிக்கும்
பொழியும் தேனைக் குடிக்கும்!





தென்னை!

சி.விநாயகமூர்த்தி

அன்னை யென்று தென்னை தன்னை
அன்பு பொங்கப் போற்றுவார்
தன்னை நல்கும் தியாகி போல
என்றும் நன்று புரிவதால்!

உப்பு நீரை அடியில் வாங்கி
உச்சி வரையில் பாய்ச்சுது
எப்படியோ தித்திப் பாக்கி
இளநீர் தன்னை வழங்குது!

தென்னங் கீற்றை ஊஞ்ச லாக்கி
தென்றல் வந்து கொஞ்சுமே
சின்ன அணிலும் குருவி குயிலும்
திரியும் தென்னந் தோப்பிலே!

காணி நிலம் பாரதியார்
கவிதை மூலம் கேட்கையில்
கேணி யருகில் தென்னை மரங்கள்
தேவை யென்று பாடினார்!

வண்டு!

மரங்கள் காணும் எங்கும்
மரத்தின் துளையில் தங்கும்
கரங்கள் வண்டுக் கில்லை
கவலை அதனால் இல்லை!

செடியை வளர்த்தால் பூக்கும்
சில்லு வண்டு பார்க்கும்
விடிந்தால் வண்டின் பாட்டு
வீட்டார் மகிழ்வோம்
கேட்டு!





ர. விஷ்ணு பிரகாஷ்,
9 ஆம் வகுப்பு, அ.உ.நி. பள்ளி,
பொள்ளாச்சி.




வி.சி. சரண்யா,
7 ஆம் வகுப்பு,
சிங்காரம் பிள்ளை பெண்கள்
மேனிலைப் பள்ளி,
சென்னை.

அ. சார்லஸ்,
5 ஆம் வகுப்பு,
எஸ்.ஆர்.எஃப். வித்யாலயா
மெட்ரிக் பள்ளி,
சென்னை.







உங்கள்




வி. திலக் ராஜ்குமார்,
9 ஆம் வகுப்பு,
ஸ்ரீ சாரதா பால மந்திர் ஆண்கள் மெட்ரிக் பள்ளி,
சேலம்.



ஆ. பிரேம்குமார்,
11 ஆம் வகுப்பு,
அரசு மேனிலைப் பள்ளி,
முசிறி.

ஏ. சுவாதி,
7 ஆம் வகுப்பு,
முருகதனுஷ்கோடி மகளிர் மேனிலைப் பள்ளி,
சென்னை.





கைவண்ணம்!


குரைக்காத நாய்!

நாய் குரைத்தால் சிலருக்குப் பயமாகக்கூட இருக்கும். இதில் குரைக்காத நாய் வகை உண்டு. அதுதான் **'பாசன்ஜி'**. பாசன்ஜி குரைக்காவிட்டாலும் பலவகையான குரல்களை எழுப்பும். குரைக்கின்ற நாய்களின் கூட்டத்தில் நின்றால், தானும் குரைப்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தும். பார்ப்பதற்கு இந்திய நாட்டு நாய்களைப் போன்றிருக்கும். ஆனால், 'பாசன்ஜி' வேட்டை நாய் வகையைச் சார்ந்தது. இதன் பூர்வீகம் மத்திய ஆப்பிரிக்கா!

பாசன்ஜியின் உயரம், 41 முதல் 43 சென்டிமீட்டர். இவற்றின் எடை, பத்து முதல் பன்னிரண்டு கிலோ. உடல் தோற்றம் மென்மையாகவும் மினுமினுப்பைக் கொண்டதாகவும் இருக்கும். இதன் ஆயுள் காலம் பத்து முதல் பன்னிரண்டு ஆண்டுகள். இவற்றின் வால் சுருண்டும், காதுகள் நீண்டு நிமிர்ந்தும், துறுதுறுவென ஒரு மான் குட்டி போல இருக்கும்.

பாசன்ஜி நாய் வரலாற்றுச் சிறப்புமிக்கது. எகிப்திய 'பாரோ' மன்னர்களின் கல்லறைகளிலும் பிரமிடுகளிலும் பாசன்ஜி பற்றிய குறிப்புகளைக் காணமுடிகிறது.





அசைவச் செடிகள்!



தாவர உணவு உண்பவர்களை சைவம் என்பர். ஆனால், சில செடிகளே அசைவச் செடிகளாக உள்ளன. **'பிட்சர்'** செடிகளை அசைவச் செடிகள் என்று அழைக்கின்றனர். பொதுவாக, அனைத்துச் செடிகளும் ஒளிச் சேர்க்கையின் மூலம் உணவு தயாரித்து வாழ்க்கை நடத்துகிறபோது, இந்தச் செடிகள் அசைவ

உணவையும் சீரணிக்கும்.

'நெபன்திஸ் பிட்சர்' நீளமான வளை போன்ற குடுவையைப் பெற்றுள்ளது. அதன் உள்ளே செல்கின்ற பூச்சிகள், தேனீக்கள், சிலந்திகள் அவ்வளவுதான்! சில நேரங்களில் பிட்சர் வகைச் செடிகளில் தவளைகளும் மாட்டுவதுண்டு. நெபன்திஸ் பிட்சர், சூரியத் துளி எனப்



படும் சன் ட்யூ, பட்லர் வொர்ட், டயோனியா, கோப்ரா லில்லி போன்ற பூச்சி தின்னிச் செடிகள் உலகெங்கும் காணப்படுகின்றன.

இந்தியாவில் பிட்சர் செடிகள் மேகாலயாவில் காணப்படுகின்றன. பட்லர் வொர்ட் செடிகள் இமயமலையிலும், டயோனியா அமெரிக்காவிலும் அதிகமாக வளர்கின்றன. இதில் ஒவ்வொரு செடிகளும் பூச்சிகளைப் பிடிக்க, தனித் தனித் தகவமைப்புகளைக் கொண்டுள்ளன.

கூடு கட்டும் பாம்பு!

இராஜ நாகம்தான் கூடு கட்டும் பாம்பு எனப்படுகிறது. இந்திய இராஜ நாகங்கள் மஞ்சள் மற்றும் கறுப்பு கலந்த நிறங்களில் காணப்படும். சீன இராஜ நாகங்கள் கறுப்பு மற்றும் பிரௌன் நிறங்களிலும், லேசான வெள்ளை நிறத் தோடும் இருக்கும்.

இராஜ நாகங்கள் 18.5 அடிகள் வரை



இருக்கும். எடை ஒன்பது கிலோ. ஒரே ஒரு கொத்தலில் ஒரு மனிதனைக் கொல்லும் விஷத்தன்மை கொண்டது. இவை மழைக் காடுகளிலும், இந்திய சமவெளிப் பகுதிகளிலும், தென் சீனா மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் அதிகமாகக் காணப்படுகின்றன.

இந்தியாவில் ஆண்டுதோறும் சராசரியாக இருபதாயிரத்துக்கும் மேற்பட்டோர் பாம்புக் கடிக்குப் பலியாவதாகக் கணக்கெடுப்புகள் கூறுகின்றன. இதில் இராஜநாகம் முதன்மை பெறுகின்றது. பொதுவாக இவை 150 முதல் 200 மில்லி கிராம் நஞ்சு கொண்டவை.

உலகிலேயே கூடு கட்டும் ஒரே பாம்பு இராஜநாகம்தான். பெண் பாம்பானது இலை, தழைகளை எல்லாம் தன் வாலால் சுருட்டிச் சேர்த்துக்கொள்ளும். சிறு குச்சிகளும், மண் துகள்களும் சேர்ந்து இது பார்ப்பதற்கு ஒரு கூடு போல அமையும். இராஜநாகம் கட்டும் இந்தக் கூடு கூம்பு வடிவத்தில் இருக்கும். இவை முப்பது செண்டிமீட்டர் உயரம் இருக்கும். முட்டைகளைக் கூட்டின் அடியில் இடும். ஒரு சமயத்தில் நாற்பது முதல் அறுபது முட்டைகள் வரை இடும். இந்த முட்டைகள் பொரிந்து வர 65 முதல் 80 நாட்கள் ஆகும்.




நீவா பறவை!

கண்டம் விட்டுக் கண்டம் கடந்து செல்வதில் உலகச் சாம்பியன், **'ஆர்டிக் டர்ன்'** பறவை. ஆண்டுக்கு 20,000 மைல்கள் பயணம் செய்யும். இப்பறவைகள் ஒரே ஆண்டில் இரண்டு கோடை காலங்களைச் சந்திக்கின்றன. ஆர்டிக் டர்ன் பறவை தன் வாழ்நாளில் பறக்கின்ற தூரத்தை நிலவுக்குச் சென்று வரும் தூரத்தோடு ஒப்பிடலாம்.



ஆர்டிக் பகுதியிலிருந்து அண்டார்டிகா வரை பறந்து செல்லும் இவை, வெள்ளை நிறத்தைக் கொண்டவை; தலையில் தொப்பி போட்டது போன்ற கறுப்பு நிறமும் இருக்கும். நீளமான வால், லேசாகப் பிரிந்து நிற்கும். பறவையின் நீளம் 28 முதல் 39 செண்டிமீட்டர். இறக்கையை 65 முதல் 75 செண்டிமீட்டர் வரை விரிக்கும். எடை 90 முதல் 120 கிராம் ஆகும்.


கோகுலம்
எக்ஸ்பிரஸ்
கலக்கல் காமிக்ஸ்
பல்சுவைகளில்
10
படக்கதைகள்

ஹலோ குட்டீஸ்!

இதழுக்கு இதழ் புதுமை. அதுதான் உங்கள் கோகுலம்! அந்த வகையில் இதோ **'கோகுலம் எக்ஸ்பிரஸ்'**


அதென்ன கோகுலம் எக்ஸ்பிரஸ்?

மின்னல் வேகத்தில் செல்லும் வாகனத்துக்கு 'எக்ஸ்பிரஸ்' என்று பெயர். அதுபோல் இந்த முப்பத்து இரண்டு பக்கங்களும் (25 முதல் 56 வரை) படிக்க ஆரம்பித்தால், இடையில் வைக்கவே தோன்றாது. அவ்வளவு விறுவிறுப்பாகவும் வேகமாகவும் செல்லும். 'அதற்குள் படித்து விட்டோமா' என்று நீங்கள் வியக்கப் போவது உறுதி! இந்த முப்பத்து இரண்டு பக்கங்களையும் நீங்கள் தனியாக எடுத்து 'பின்' செய்து தனிப் புத்தகமாக வைத்துக் கொள்ளலாம்.

இந்த மாதம் பல்சுவைகளில் படக்கதைகளை அளித்துள்ளோம். அடுத்த மாதம் வேறொரு ஐடியாவுடன் உங்களைச் சந்திக்கிறோம். இந்த கோகுலம் எக்ஸ்பிரஸுக்கு நீங்களும் வித்தியாசமான யோசனைகளை எழுதியனுப்பலாம்!

அன்புடன்

ஆசிரியர்








முன் ஜாக்கிரதை முத்து!
முத்து சந்தையில் வீட்டுக்குப் பொருட்களை வாங்கி, பெரிய கோணிப் பையில் கட்டினார்.
கூலி ஆளிடம்...
இந்த மூட்டையை என் வீட்டுக்கு எடுத்துட்டுப் போகணும்.
சரிங்க, முப்பது ரூபாய் கொடுங்க!
தரேன்! பத்திரமா போ. நான் என் நண்பன் வீட்டுக்குப் போய்ட்டு வரேன்.
ஐயா ஒரு நிமிஷம்! உங்க வீட்டு முகவரியைக் கொடுத்துட்டுப் போங்க!
திருட்டுப் பயலே! வீட்டு முகவரியைத் தெரிஞ்சுட்டு, யாரும் இல்லாதப்ப வந்து திருடலாம்னு பார்க்கறியா?
நான் என்ன ஏமாளியா? அதெல்லாம் கொடுக்க முடியாது போ! போ!
?!?!
முற்றும்

பொன் கூண்டு!

கதை : உ. சுல்தானா
படம் : பிள்ளை




கனகசபை சம்மதித்தார். காட்டு வழியே செல்கையில் கிளிக் கூட்டம் வானில் பறப்பதைக் கண்டார்.
கிளிகளே! உங்கள் இனத்துக் கிளி ஒன்று என் வீட்டில் பொன் கூண்டில் சொகுசாக வசிக்கிறது.
அடுத்த நொடி, ஒரு கிளி கண்களை மூடியபடி, 'பொத்' தென தரையில் விழுந்தது.
அடடா! நான் என்ன சொல்லிவிட் டேன்? ஏன் இந் தக் கிளி இறந் தது?
கீ... கீ... கீ...
கனகசபையின் பயணம் தொடர்ந்தது. வியாபாரம் முடிந்து ஊர் திரும்பினார்.
அப்பா வந்தாச்சு! அப்பா வந்தாச்சு!
இந்தா புதுச் சட்டை, பொம்மை!
பிறகு கிளியிடம் நடந்ததைச் சொன்னார். அடுத்த நொடி...
அடடா! என்ன ஆச்சு? இந்தக் கிளியும் இறந்துவிட்டதே! அந்தக் காட்டுக் கிளியும், இதுவும் தோழர்கள் போலும்.


கனகசபை கூண்டைத் திறந்து கிளியை வெளியே எடுத்தார்.
கிளி பறந்து சென்று தோட்டத்து மரக் கிளையில் அமர்ந்தது. அவர் கோபமானார்.
நன்றி கெட்ட கிளியே, உன்னை நான் எப்படியெல்லாம் வளர்த்தேன். என்னையே ஏமாற்றி விட்டாயே!
அதற்கு கிளி -
ஐயா, எனக்குத் தேவை, பொன் கூண்டோ, உயர்வகை உணவோ அல்ல. சுதந்திரம்! நான் இங்கிருந்து எப்படித் தப்பிப்பது என்பதை அறியவே, என் இனத்தாரிடம் உங்களைப் பேசச் சொன்னேன்.
அந்தக் காட்டுக் கிளி உண்மையில் இறக்கவில்லை. அது சொன்ன யோசனையைத்தான் நான் இப்போது செய்தேன். உங்கள் அன்புக்கு நன்றி! நான் போய் வருகிறேன்.



கந்தனும் ரங்கனும் நண்பர்கள். ஒருமுறை காட்டு வழியே வருகையில்...
சுந்தா, அங்கே பார், அந்தப் புதரில் ஏதோ மின்னுகிறது.
கரடி கொடுத்த புதையல்!
கதை : ஸ்ரீரா. இரவிவர்மன்
படம் : ராம்கி
ஆமாம்! வா, போய்ப் பார்ப்போம்!
அங்கே பானை நிறைய பொற்காசுகள் இருந்தன.
ஆஹா, புதையல்!
கந்தா! இது காட்டு வழி. அந்தி சாய்ந்துவிட்டது. திருடர்கள் தொந்தரவு அதிகம். இரவு இங்கேயே தங்கிவிட்டு காலையில் போகலாம்.
புதையல் பானையை மரத்தடியில் புதைத்துவிட்டு, இருவரும் அங்கேயே படுத்தனர்.
ரங்கா, நாம் ஊருக்குச் சென்றதும் புதையலை சமமாகப் பிரித்துக்கொள்வோம்.
சரி கந்தா. இப்போது உறங்குவோம்.


காலையில் கந்தன் கண் விழித்தான்.
ரங்கனைக் காணவில்லையே... புதையல் இருந்த இடமும் தோண்டப்பட்டுள்ளது. ஏமாற்றிவிட்டானே!
கந்தன் சோகத்துடன் ஊர் நோக்கி நடந்தான். அப்போது ஒரு மரத்தடியில்...
அடடா! கரடிக்குக் காலில் அடிபட்டுள் ளது போலும். வலி யால் துடிக்கிறது. உதவுவோம்!
மூலிகை இலைகளி லிருந்து சாறு எடுத்து அடி பட்ட இடத்தில் ஊற்றி, கட்டினான்.
தேனடை எடுக்க மரத்தில் ஏறும்போது விழுந்துள்ளது. கவலைப்படாதே, குணமாகிவிடும்.
எழுந்த கரடி, புதருக்குப் பின்னால் சென்றது. திரும்பி வந்த அதன் கைகளில்...
அட, இது நேற்று புதைத்த பானை ஆயிற்றே! உன்னிடம் எப்படி வந்தது? ரங்கன் என்ன ஆனான்?
புதையலை கொடுத்துவிட்டு கரடி சென்றுவிட, கந்தன் தொடர்ந்து நடந்தான். ஓரிடத்தில்...
ஆ! அம்மா! வலிக்குதே...
அட! இது ரங்கனின் குரலல்லவா?



குரல் வந்த திசையில் கந்தன் ஓடினான். அங்கே...
ஐயோ! ரங்கா உனக்கு என்ன ஆச்சு? எப்படி அடிபட்டது?
கந்தா, உன்னை ஏமாற்ற நினைத்ததற்குக் கிடைத்த பரிசுதான் இது!
இரவு நீ அசந்து தூங்கியதும் புதையலை எடுத்துக்கொண்டு கிளம்பினேன். வழியில் நான்கு திருடர்கள் என்னை மடக்கி அடித்தனர்.
அந்தச் சமயம் புலியின் உறுமல் கேட்கவே, பானை யைத் தூக்கி வீசிவிட்டு ஓடிவிட்டனர். நண்பா, என்னை மன்னித்துவிடு!
பரவாயில்லை, இனிமேல் சுயநலமாய் இருக்காதே. புதை யல் கிடைத்துவிட்டது. வா, ஊருக்குச் சென்று பங்கு போட்டுக் கொள்வோம்.
இருவரும் மகிழ்ச்சியுடன் நடந்தனர்.
முற்றும்

மரத்தின் வலி!

கதை : புலேந்திரன்
படம் : கலா




மாடசாமி தொடர்ந்து தான் தயாரித்த கருவிகளை மரத்தில் வெட்டி சோதித்துப் பார்த்தான். இதனால் மரத்தின் அடிப் பகுதியில் பாதிவரை வெட்டுப்பட்டு இருந்தது. ஒருநாள் பலமாக காற்றடிக்க...
இந்த மூடனிடம் பேசுவது வீண்!
என்ன சத்தம்?
மாடசாமி பயந்து விலகினான். மரம் முறிந்து விழுந்து, அவனது பட்டறை நாசமானது.
எனது அறிவீனத்தால் தொழில் செய்ய இடம் தந்த மரத்தைக் கொன்றுவிட்டேனே! கடவுளே, என்னை மன்னித்துவிடு!
முற்றும்



தெனாலிராமன்
கதை : ஜிங்கிள் பெல் கிரியேஷன்ஸ்
தமிழ் வடிவம் : எஸ்.ஸ்ரீகபன் கபால்
தெனாலிராமன் குறும்புக்காரச் சிறுவன்
ஆ!
அடேய் பொடியா!
ஓ! உங்க தலையா? நான் பானைன்னு நினைச்சேன்.
ஒருநாள் வீட்டில்
ராமா, உன் மாமா வந் திருக்கார்.
வாங்க மாமா, கையில என்ன மூட்டை? எனக்குத்தானே?
எனக்கு இது போதும். மாமா வேண்டாம்!
?


ஆஹா! அழகு சொக்கா!
புதுச் சட்டையுடன் தெருவில் விளையாடினான்.
அடடா, மண்ணில் விளையாடி அழுக்காயிடுச்சே! அம்மா திட்டுவாங்களே...
சலவைத் தொழிலாளியிடம் சென்றான்.
துவைச்சுக் கொடுக்க மூன்று நாட்களாகும்.
சரி!
மறுநாள் -
ஆ! அது என்னோட சட்டையாச்சே!
சலவைக்காரர்தான் கொடுத் திருக்கணும். இது தப்பல்லவா? பாடம் புகட்டறேன்!


ஹேய் சோமு,
சட்டை அருமை!
இதை இன்னும் அரு
மையா மாத்தறேன்.
ஏய்...
ஏய்...
இப்ப
ரொம்ப
நல்லா
இருக்கு.
அப்பா, உதவி!
ஏய்...
நிறுத்து!
உன் மனசுல என்ன
நினைச்சுட்டிருக்கே?
வா, பஞ்சாயத்து
தலைவர்கிட்டே போவோம்.
ஓ!
அங்கே -
ராமா, இவர்
சொல்றது
உண்மையா?
இல்லீங்க ஐயா!
இந்தப் பையனை நான்
ஒண்ணும் செய்யலை...



நான் என் சட்டைக்குத்தான் தண்டனை அளித்தேன். அது தப்பா?
என்ன?
இதை நேத்துதான் சலவைக்குப் போட்டேன். அங்கே இருந்து தப்பிச்சு வந்திருக்கு.
ஓஹோ!
அவர் புரிந்துகொண்டார்.
புத்திசாலி ராமன்! சலவைத் தொழிலாளியைப் பற்றிச் சொல்கிறான்.
உண்மையைச் சொல். இது யார் சட்டை?
மன்னிச்சுடுங்க! இது வாடகைக்கு வாங்கினது.
சலவைத் தொழிலாளியை அழைத்து வந்தனர்.
நீ செய்தது தவறு. இனி இப்படி நடந்தால் ஊரை விட்டே துரத்தி விடுவேன்.
மன்னிச்சுடுங்க, எஜமான்!
ஹா... ஹா!
முற்றும்



அந்த ஏரிக்கரை மரத்தில் சிண்டு, கோண்டு என்ற இரண்டு காக்கைகள் இருந்தன. ஒருமுறை சிண்டுவுக்கு நத்தை ஒன்று கிடைத்தது. அதைக் கவ்வியவாறு மரத்தில் வந்து அமர்ந்தது.



நத்தையைக் கிளை மேல் வைத்து, ஓட்டினை அலகால் கொத்தி உடைக்க முயன்றது. ஓடு வலுவாக இருந்ததால் பலமுறை முயற்சித்தும் அது உடையவில்லை. அப்போது கோண்டு அங்கே வந்தது.



''சிண்டு என்ன செய்யறே?'' என்று கேட்டது கோண்டு.

''நத்தை ஓட்டை உடைக்க முடியலை. எப்படிச் சாப்பிடறதுன்னு தெரியலை'' என்று சொன்னது சிண்டு.



''உயரத்தில் இருந்தபடி ஒரு பாறை மீது போட்டால் ஓடு உடையும்'' என்றது கோண்டு.

''யோசனைக்கு நன்றி!'' என்ற சிண்டு, நத்தையை வாயில் கவ்விய வாறு பறந்து, ஒரு பாறைக்கு நேரே வந்தது.

படம்: மகேஸ்

ஏமாற்றாதே!

கோண்டு சொன்னபடி வீசியது. நத்தை பாறையில் மோதி ஓடு உடைந்தது. அப்போது சட்டெனப் பறந்து வந்த கோண்டு, நத்தையைக் கவ்வியபடி சென்றது. பாவம் சிண்டு! ஏமாற்றத்தால் கோபமடைந்தது.



''ஏய் கோண்டு! இப்படியா நண்பனுக்குத் துரோகம் செய்வது?'' என்று சீறியது.

''இது என்னுடைய புத்திசாலித் தனம். முடிந்தால் நீயும் இதுபோல் புத்திசாலித்தனமாக இரு'' என்று சிரித்தது கோண்டு.



அப்போது வாயில் இருந்த நத்தை நழுவி கீழே விழுந்தது. இதையெல் லாம் கவனித்துக்கொண்டிருந்த ஒரு கழுகு, சட்டென நத்தையைக் கவ்விய படி பறந்தது. தடுக்க முயன்ற கோண் டுவையும் நகத்தால் கீறிவிட்டுச் சென்றது.



கோண்டு வலியால் துடித்தது. ''பார்த்தாயா! அடுத்தவர்களை ஏமாற் றுவது புத்திசாலித்தனமல்ல. நீ ஒரு வனை ஏமாற்றினால் உன்னை இன் னொருவன் ஏமாற்றுவான்'' என்றது சிண்டு. கோண்டு மனம் வருந்தியது.



ஏமாறாதே!!

கதை:
எஸ்.சிவப்பிரியா,
ஏழாம் வகுப்பு,
சாரதா மெட்ரிக் பள்ளி, செஞ்சி.


புதிய மன்னன்!

கதை : வி.ஜெயலெட்சுமி
படம் : லலிதா




இன்று முதல் இவரே மன்னர். இந்தக் கிரீடத்தைச் சூட்டி, செங் கோலை அளிக்கிறோம்.
இந்த ஏழைக்கு வந்த வாழ்வைப் பாரேன்
சரி! சரி! வா போகலாம்!
புதிய மன்னன் ஏழையாக இருந்தாலும் அறிவாளி.
மன்னர் அறிவாளியாகவும் வீர ராகவும் இருக்கிறார்.
ஆனால், ஒரு விஷயம் மர்மமாக இருக்கிறது.
அரசர், அரண்மனை வளாகத்திலேயே ஒரு குடிசையைக் கட்டச் சொன்னார். தினமும் அங்கே தனியாகச் சென்று வருவார்.
காலம் உருண்டோடியது. மன்னருக்கு வயதாகிவிட்டது.
மந்திரிகளே! நானிருக்கும் போதே புதிய மன்னரைத் தேர்ந் தெடுக்க விரும்புகிறேன்.


வழக்கம்போல் மக்கள் கூடினர். சந்தோஷப் பறவை பறந்து, ஓர் இளைஞனின் தலையில் அமர்ந்தது. மன்னர் மகிழ்ந்தார்.
இளைஞனே, இன்று முதல் நீயே மன்னன்! நாட்டு மக்கள் இனி உனது குழந்தைகளைப் போல.
பழைய மன்னர் வழக்கம்போல் குடிசைக்குள் சென்று, வெளியே வந்தபோது, முதன்முதலில் அவர் அணிந்திருந்த அதே ஆடை
அனைவருக்கும் அதிர்ச்சி!
மன்னா! இது என்ன கோலம்?
பழைய வாழ்க்கையை மறக்காமல் இருக்க தினமும் குடிசைக்குள் இந்த ஆடையில் இருந்தேன்.
பதவியும் வசதியும் வந்ததும் பழையதை மறந்து, ஆணவத்தால் தவறாக நடந்து அழிந்தவர்கள் பலர். நான் அப்படி இருக்கக் கூடாதென நினைத்தேன்.
இப்படி ஒரு மன்னர் எங்களுக்குக் கிடைத்தது நாங்கள் செய்த புண்ணியம்.
நானும் உங்களைப் போல் ஆட்சி புரிவேன்!
முற்றும்


ஒரு காட்டில் செம்மறி ஆடு தனது இரண்டு குட்டிகளுடன் வசித்து வந்தது. அவற்றின் மீது நரிக்கு நீண்ட நாட்களாக ஒரு கண்.
நரி போட்ட திட்டம்!
இவற்றை எப்படியாவது சாப்பிடணும்!
கதை: பி.எஸ்.ஜேம்ஸ்
படம் : வாசன்
வெளியே பிடிப்பதைவிட, அவற்றின் இடத்தில் வைத்து பிடிப்பது சுலபம்!
அடுத்தநாள் செம்மறி ஆடு குட்டிகளுடன் தனது குகையிலிருந்து வெளியே வந்தது.
என் திட்டத்தைச் செயல்படுத்த நேரம் வந்தாச்சு!
செம்மறி ஆடு குட்டிகளுடன் இரை தேடக் கிளம்பியதும், நரி குகைக்குள் நுழைந்தது.
இன்னிக்கு நமக்கு நல்ல வேட்டை!


செம்மறி ஆடு இரை தேடி முடித்து திரும்பியது.
ம்... என்ன இது, கதவு லேசாக திறந்துள்ளதே! போகும்போது சரியாகத்தானே மூடினோம்? உள்ளே யாரோ இருக்கிறார்கள்.
புத்திசாலி செம்மறி ஆடு ஒரு திட்டம் தீட்டியது.
பிள்ளைகளே! நேத்து ராத்திரி நம்ம வீட்டுக்கு வந்த விருந்தாளி மாமாகிட்ட என்ன சொல்லிட்டுப் போனோம்?
என்ன சொன்னோம்?
நாம திரும்பி வந்து கதவைத் தட்டினதும் குரல் கொடுக்கச் சொன்னோம் இல்லையா? அமைதியா இருக்காரே?
அதானே! வெளியே போய்ட்டாரோ? இப்பவே போய் தேடுவோம்!


உள்ளே இருந்த முட்டாள் நரி, ஆடு போல் கத்தியது. செம்மறி ஆட்டுக்கும் குட்டிகளுக்கும் உண்மை புரிந்தது. அவை ஒரு திட்டம் தீட்டின.
ஆடுங்க திரும்பிப் போய்ட்டா போட்ட திட்டமெல்லாம் வீணாயிடுமே. ஆடு மாதிரியே கத்துவோம்.
சருகுகளை எடுத்து வந்து குகை வாசலில் போட்டு, தீ மூட்ட, தீ குகைக்குள்ளும் பரவியது.
சூடு பொறுக்காமல் வெளியே வந்த நரி ஓட்டமெடுத்தது.
ஆ! அம்மா சூடு! சூடு!
நரிப் பயலே! எங்களையா ஏமாற்றப் பார்க் கிறாய்?
முற்றும்





பலே பிரவீன்
கதை : யுவா படம் : பிள்ளை
எட்டாம் வகுப்பு படிக்கும் பிரவீன் படுசுட்டி, புத்திசாலி! விடுமுறையில் கிராமத்திலுள்ள அத்தை வீட்டுக்குச் சென்றான்.
வாப்பா பிரவீன்! நல்லா இருக்கியா?
நல்லா இருக்கேன் அத்தை!
அத்தை மகன் கணபதி மற்றும் நண்பர்களுடன் வீட்டுத் தோட்டத்தில் -
ஆஹா! நம்ம தோட்டத்து மாங்காயின் ருசியே தனிதான்!
இன்னிக்கு என்ன விளையாட்டு விளையாட லாம்?
திருடன், போலீஸ்!
இங்கேயேவா? வாங்க, ராஜா மண்டபத்துக்குப் போகலாம்.


ஊர் எல்லையிலுள்ளது ராஜா மண்டபம். யாரோ ஒரு ராஜா ஓய்வெடுக்கக் கட்டியது. ஊர்க் கூட்டம், பஞ்சாயத்து எல்லாம் அங்குதான் நடக்கும். சிறுவர்கள் ஓடிப்பிடித்து விளையாட ஏற்ற இடம். ஆனால் -
ஐயையோ! பிரவீனுக்கு விஷயமே தெரியாதா கணபதி?
இன்னும் சொல்லலை!
என்ன விஷயம் கணபதி?
அங்கே பேய் இருக்கு. யாருமே இப்ப அங்கே போறதில்லை!
போன வருஷம் வந்துப்பகூட விளையாடினோமே!
இப்பதான் ஆறு மாசத்துக்கு முன்னாடி பேய் குடி வந்துடுச்சு.
பேய் குடி வந்துடுச்சா? ஹா... ஹா... ஹா... வாடகை எவ்வளவு தருது?
சிரிக்காதே பிரவீன்! ஊர்க் காவலாளி நேர்ல பார்த்தாராம்.
நடுராத்திரி காவல் காத்தபடி மண்டபம் பக்கம் ரோந்து போனப்ப பார்த்தார்...



பிறகு பல விநோதமான சம்பவங்கள் நடந்தது. வீடுகள் மேல் கற்கள் விழும். மண்டப வாசலில் சுடுகாட்டு சாம்பல் இருக்கும்.
இரவுக் காட்சி சினிமாவுக்குப் போய்ட்டு மண்டபம் பக்கமா வந்தவங்க, சிரிப்பு, அழுகைன்னு விநோதமான சத்தத்தைக் கேட்டிருக்காங்க.
இப்பல்லாம் யாரும் இரவுக் காட்சிக்கே போறதில்லை. அதனால 'மாணிக்கம்' தியேட்டர்ல இரவுக் காட்சியையே ரத்து செய்துட்டாங்க.
ஆச்சர்யமா இருக்கே!
மிலிட்டரி மாமா சொன்னா நம்புவதானே? வா, போகலாம்.
மிலிட்டரி மாமா சிறுவர்களோடு நன்கு பழகுவார்.
ஆமா பிரவீன்! அன்னிக்கு சினிமாவுக்குப் போய்ட்டு மண்டபம் பக்கமா வந்தேன்...


...சிரிப்புச் சத்தம் கேட்டது. துணிச்சலா உள்ளே போய்ப் பார்த்தேன். யாரும் இல்லை.
இப்பொழுது நம்பறியா? வா, போகலாம்.
போய்ட்டு வரேன் மாமா.
மறுநாள் காலைக் காட்சி சினிமாவுக்குச் சென்றார்கள்.
இந்த டிக்கட் கிழிக்கற ஆளை எங்கோ பார்த்த மாதிரி இருக்கே!
கணபதி, முன்னாடி தாத்தாதா இருந்த!
இவர் புதுசு. இவரை மாதிரி இன்னும் நாலு பேர் தியேட்டர்ல புதுசா வேலைக்குச் சேர்ந்திருக்காங்க.
சற்று நேரத்துக்குப் பின் -
கணபதி, எனக்கு தலை வலிக்குது. நான் வீட்டுக்குப் போறேன்.
சரி! மண்டபம் பக்கமா போறப்ப கவனமா இரு.
அண்ணே! கதவைத் திறங்க. நான் வீட்டுக்குப் போறேன்.
இவனும் புதுசா இருக்கான். தலைமுடி ஒரிஜினல் மாதிரி தெரியலையே...



பிரவீன் வீட்டுக்குச் செல்லவில்லை -
நிச்சயம் இந்த மண்டபத்தில் பேய் இல்லை. ஆனால், மர்மம் இருக்கிறது.
மாலை -
பிரவீன், வீட்டுக் குப் போறதாச் சொல் லிட்டு இவ்வளவு நேரம் எங்கே போய் இருந்தே....
முக்கிய விஷயமா சென்னைக்கு போயிருந்தேன்.
சென்னைக்கா? என்ன விஷயம்?
நாளை காலையில் இதுக்கான பதிலைத் தெரிஞ்சுப்பீங்க.
மறுநாள் -
அப்பா, ராஜா மண்டபம் வாசல்ல நிறைய போலீஸ் வந்திருக்கு. வாங்க போய்ப் பார்க்கலாம்.
நானும் வரேன்!
மண்டப வாசலில் ஊரே திரண்டிருந்தது.
அங்கே பார்! அவங்க சினிமா தியேட்டர்ல வேலை செய்யற நாலு பேர்தானே?
ஆமா! கையில் விலங்கு மாட்டி இருக்காங்க.


ஆ! மண்டபத்தில் இருந்து துப்பாக்கி, ஏதேதோ கருவிகளைக் கொண்டு வர்றாங்களே...
என்ன தான் நடக்குது?
இன்ஸ்பெக்டர் -
உங்க கேள்விகளுக்கு நான் பதில் சொல்றேன். இந்த மண்டபத்தில் பேயுமில்லை, பிசாசுமில்லை!
இவங்க தீவிரவாதிங்க. துப்பாக்கி, வெடிகுண்டுகளைத் தயாரிக்க இந்த இடத்தைப் பயன்படுத்திக்கிட்டாங்க. அதுக்காக பேய் கதையை உருவாக்கி சிரிப்புச் சத்தம் வர்ற மாதிரி டேப் ரிக்கார்டெல்லாம் போட்டு ஏமாத்தினாங்க.
பகல்ல தியேட்டரில் வேலை, இரவில் இந்த வேலை. இதைக் கண்டுபிடிக்க உதவினது பிரவீன்தான்.
எப்படி?
இவங்க ஃபோட்டோ மூணு வருஷத்துக்கு முன்பு பேப்பர்ல வந்தது. சிறையிலிருந்து தப்பி மாறுவேஷத்துல இங்கே வந்துட்டாங்க. தியேட்டர் ஓனரும் உடந்தை...
பலே பிரவீன்! நான்கூட பேய்னு ஏமாந்துட்டேன். நீ இந்த ஊரை மட்டுமில்லை, இந்த நாட்டையே காப்பாத்த உதவி செய்திருக்கே!
முற்றும்



பணம் எங்கே?
கதை, படம் : வீரமுடி
பணத்தை மூட்டை கட்டிக்கொண்டு வெளியே வந்தார்கள் ஜிட்டுவும் ஜகாவும்.
காட்டு வங்கியில் ஓர் இரவு -
ஆஹா! இன்று சரியான வேட்டை!
ஓவ்... ரொம்ப கனம்!
இன்னொரு ஆள் இருந்தா நல்லாயிருக் கும்.
உஷ்.. யாரோ வர்றாங்க!
கழுதை யண்ணே! இந்த மூட்டையைத் தூக்கிட்டு வர்றீங்களா?
சரி!
மூவரும் நீண்ட தூரம் நடந்தனர். களைப்பாக இருந்ததால் ஓரிடத்தில் தங்கிவிட்டு, காலையில் செல்ல முடிவெடுத்தனர். கழுதை தூங்கிவிட்டதாக நினைத்த நரிகள்...
பயல் தூங்கிட்டான். இந்த பலா பழத்தை நாமே சாப்பிட்டுடு வோம்!
அடேய்! கஷ்டப்பட்டு சுமந்துட்டு வர்றவனுக்குக் கொடுக்காம சாப்பிடறீங்ளா? இருங்க! இருங்க!


நரிகள் தூங்கியதும் மூட்டையைப் பிரித்த கழுதை, பணக் கட்டுகளைப் பார்த்தது. அதன் நாவில் நீர் ஊறியது.
ஆஹா! மொத்தத்தை யும் தின்னுட வேண்டியதுதான்!
கண் விழித்த நரிகள் திடுக் கிட்டன.
அதே சமயம் விடிந்துவிட அங்கே போலீஸ் சிங்கங்கள் வந்தன.
அசையாம நில்லுங்க! நகர்ந்தா சுட்டுடுவோம்!
வங்கியில் கொள்ளை நடந்திருக்கு. உங்களைச் சோதனை போடணும்.
நாங்க திருவிழா வுக்குப் போய்ட்டு வரோம். எதுவும் தெரியாது!
சார் இவங்ககிட்டே பணம் எதுவுமில்லை. வேற இடத்துல பார்க்கலாம்.
சரி! வாங்க, சீக்கிரம் போகலாம்!
நரிகள் கழுதையை வணங்கின.
அண்ணே, உங்களாலதான் நாங்க தப் பினோம். இனிமே உழைச்சு வாழறோம்!

அடுத்த கோகுலம் எக்ஸ்பிரஸ்...

அறிவோடு விளையாடு!





எண் விளையாட்டு...



சொல் விளையாட்டு...




செயல் விளையாட்டு...

உங்கள் அறிவுக்கும் கற்பனைக்கும் சவால் விடும் புதிர்கள்!
சந்திக்க ரெடியா இருங்க குட்டீஸ்!

வண்ணம் தீட்டுங்கள்!

உங்கள் கைவண்ணத்தால்
இங்குள்ள படத்தை வண்ணம் தீட்டி
அழகுப்படுத்துங்க குட்டீஸ்!



தெரியுமா?



சத்து...சத்து...

கத்தரிக்காய்	- வைட்டமின் சி; இரும்புச் சத்து
முருங்கைக்காய்	- கொழுப்பு; வைட்டமின் ஏ, சி; இரும்புச் சத்து,
மாங்காய்	- வைட்டமின் ஏ; நார்ச் சத்து
வெண்டைக்காய்	- பாஸ்பரஸ்; இரும்புச் சத்து; வைட்டமின் ஏ,பி.சி,
அவரைக்காய்	- புரதம்; இரும்பு; சுண்ணாம்பு
அத்திக்காய்	- வைட்டமின் சி; சுண்ணாம்பு, இரும்பு,
பாகற்காய்	- இன்சுலின் சுரப்பை அதிகப்படுத்தும் வேதிப் பொருள்
பீர்க்கங்காய்	- நீர்ச்சத்து
கோவைக்காய்	- வைட்டமின் ஏ
புடலங்காய்	- புரதம்; வைட்டமின் ஏ; சுண்ணாம்பு, கந்தகம்
பூசணிக்காய்	- கொழுப்பு; புரதம்
கொத்தவரைக்காய்	- நார்ச்சத்து
வாழைக்காய்	- கொழுப்பு; வைட்டமின் ஈ
வெள்ளரிக்காய்	- வைட்டமின் ஏ; பொட்டாசியம்
சுண்டைக்காய்	- வைட்டமின் சி
களாக்காய்	- வைட்டமின் ஏ, சி
நெல்லிக்காய்	- வைட்டமின் சி; செல்லுலோஸ்; இரும்பு; கார்போ ஹைட்ரேட்; கால்சியம்; பாஸ்பரஸ் நிகோடினிக் ஆசிட்

ப.எழிலன்



சூப்பர் சத்து!

காரட்	வைட்டமின் ஏ; கார்போஹைட்ரேட்; தாது உப்பு; மெலோனி சைட்ஸ் (நிறமி அணுக்கள்)
பீன்ஸ்	புரதம்; கார்போஹைட்ரேட், வைட்டமின் ஏ; தாது உப்பு
பப்பாளிக்காய்	வைட்டமின் ஏ
பலாக்காய்	சுண்ணாம்புச் சத்து
பீட்ரூட்	குளுகோஸ்
வெள்ளை முள்ளங்கி	நீர்ச் சத்து; கால்சியம்; பொட்டாசியம்; சுண்ணாம்பு; இரும்பு
காலிஃபிளவர்	பொட்டாசியம்; சோடியம்; இரும்பு; பாஸ்பரஸ்; மெக்னீசியம்; வைட்டமின் ஏ, FF
முட்டைக்கோஸ்	சோடியம்; இரும்பு; பாஸ்பரஸ், கால்சியம்; வைட்டமின் ஏ, FF

போட்டி முடிவு

தாத்தா : அட, இந்தப் பையன் எப்பவுமே டக்அவுட் ஆகிடுவானே... இப்ப சிக்ஸ் சிக்ஸா அடிக்கிறானே...
பேரன் : ஹைய்யோ... தாத்தா இது விளம்பரம்'

- ஆர். ஸ்ரீராம், சென்னை


''நேற்று நான் எது வரைக்கும் நடத்தினேன்.''
''பெல் அடிக்கும்வரை ஸார்.''

- த. பிரகல்யா, எட்டாம் வகுப்பு, பொன்னையா இராமஜெயம் பொதுப்பள்ளி, தஞ்சை



''அவர் ரொம்ப பயந்த சுபாவம்...''
''எப்படி...?''
''பறவை காய்ச்சல் பயத்துல 'முட்டை'கோஸ்கூட சாப்பிடறதில்ல...''

- ஜி.சித்தார்த், வேலூர்





காலையில் சூரிய கதிர்கள் சாய்வாக விழுகின்றன. சூரிய ஒளி காற்று மண்டலத்தின் வழியே அதிக தூரத்தைக் கடப்பதால் காலை வெயில் உறைப்பதில்லை. நடுப்பகலில் செங்குத்தாக விழுவதால் தணலாய்ச் சுடுகிறது.

- ஆர். சுகைல் அகமது, கம்பம்

எரிமலை வெடித்துச் சிதறும் போது அதில் கந்தகம், அலுமினியம், இரும்பு, மக்னீஷியம், கால்ஷியம், சோடியம், பொட்டாசியம் போன்ற உலோகத் தாதுக்களும் சிலிக்கான் அதிக அளவிலும் தீக்குழம்புடன் வெளியேறுகிறது.

- த. பிரகல்யா, தஞ்சை

பரிசுப்



ஓரறிவு - மரம், புல், பூண்டு
ஈரறிவு - சங்கு, நத்தை, மீன்
மூன்றறிவு - கரையான், ஈசல்
நான்கறிவு - நண்டு, தும்பி
ஐந்தறிவு - கால்நடை, பறவை
ஆறறிவு - மனிதன்

- இரா.ஜனனி, ஏர்குடி

நாம் பார்க்கும் மின்னலில் மின்சாரம் உள்ளது. அதைக் கொண்டு ஒரு இலட்சம் பேட்ரிகளுக்கு மின்சாரமூட்டலாம். மின்னல் வெளிப்படுகையில் அதை சுற்றியுள்ள காற்றை 33,000°C அளவுக்கு சூடாக்கும். இது சூரியனின் மேற்பரப்பை காட்டிலும் வெப்பமானது.

- பா. இரஞ்சித், சூலூர்



அறிவை முதலீடு செய்தால் அரண்மனை வாங்கலாம், ஆசையை முதலீடு செய்தால் துன்பத்தைத்தான் வாங்க முடியும்.

- சுவாமி விவேகானந்தர்

- க.ஆர்த்தி, இராஜபாளையம்

சிரிக்கத் தெரியாதவர்களுக்கு பகல் பொழுதும் இருட்டே'

- திருவள்ளுவர்

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்.

- பேரறிஞர் அண்ணா

- எம்.சௌம்யா, மதுரை

துக்கம் என்பது சிறிய கல் போன்றது. கண் அருகில் வைத்துப் பார்த்தால் உலகத்தையே மறைக்கும். கீழே போட்டுவிட்டால் கல் இருப்பதே தெரியாது.

-விவேகானந்தர்,

- கிருஷ்ணப்ரியா, சென்னை

பட்டிகள்!

ஒவ்வொன்றுக்கும் பரிசு ரூ.25/-

ரஞ்சன் கிராமத்திலுள்ள உறவினர் வீட்டுக்கு வந்திருந்தான். ஊர்த் திருவிழாவுக்குச் சென்றான். சற்று தூரத்தில் நையாண்டி மேளம் ஒலித்துக்கொண்டிருந்தது. பல சிறுவர்கள் அந்தப் பக்கமாக ஓடத் தொடங்கினர். ''அட, ஆட்டம் தொடங்கிடுச்சு'' என்றபடி வேகமாக மேளம் ஒலித்த திசையை நோக்கி பெரியவர்களும் நடக்கத் தொடங்கினர்.

''ரஞ்சன், வா நாமும் பொய்க்கால் குதிரை ஆட்டத்தைப் பார்க்கலாம்'' என்றார் சித்தப்பா. ''சீக்கிரம்! சீக்கிரம்!'' என்று தமிழ்ச்செல்வியும் அவசரப் படுத்தினாள்.

ரஞ்சன் ஒரு சினிமாவில் பொய்க்கால் குதிரை ஆட்டத்தைப் பார்த்திருக்கிறான். இப்போது அதை நேரில் பார்க்கும் வாய்ப்பு கிடைத்ததற்காக மகிழ்ந்தான். ''அவர்கூட படத்திலே ரொம்ப நல்லா பொய்க்கால் குதிரை ஆட்டம் ஆடினாரு'' என்று அந்த கதாநாயகனின் பெயரைக் குறிப்பிட்டான்.

மறுப்பதுபோலத் தலையசைத்தார் சித்தப்பா. ''அவர் பொய்க்கால் குதிரை ஆட்டம் ஆடின மாதிரி நடிச்சிருப்பாரு அவ்வளவுதான்! உண்மையான பொய்க்கால் குதிரைக் கலைஞர்கள் தங்கள்

பொய்க்கால்



கால்களில் மரக் கால்களை இணைத்துக் கட்டிக்கொண்டு ஆடுவாங்க'' என்றார்.

''என்னது? மரக் கால்களா? அதைக் கட்டிக்கொண்டு ஆடுவது ரொம்ப கஷ்டமாக இருக்குமே. தொடர்ந்து பேலன்ஸ் செய்துகொண்டே இருக்க வேண்டுமே'' என்றான்.

முதல்முறையாக கால்களில் சக்கரங்களை கட்டிக்கொண்டு, தான் 'ஸ்கேட்டிங்' செய்தது நினைவுக்கு வந்தது. தொடக்கத்தில் பலமுறை கீழே விழுந்திருக்கிறான்!

எவ்வளவு அழகாக இருக்கு பாரு!'' என்றார் சித்தப்பா.

''பொதுவாக குதிரை மேலே உட்



குதிரை!

அதற்குள் அவர்கள் அந்த இடத்தை நெருங்கிவிட்டிருந்தனர்.

இரண்டு பொய்க்கால் குதிரைகள் காணப்பட்டன. ஒன்றில் ஆணும், ஒன்றில் பெண்ணும் இருந்தனர். தலையிலிருந்து இடுப்புவரைதான் அவர்கள் உடல் தெரிந்தது. மற்ற பகுதிகள் குதிரையின் உடலுக்குள் மறைந்திருந்தன. குதிரை என்றால் நிஜக் குதிரை இல்லை. பொம்மைக் குதிரைதான்.

குதிரையின் மீது அழகான, பளிச்சென்ற வண்ணங்கள் தீட்டப்பட்டிருந்தன.

''அட்டைகளாலும் மூங்கில் கீற்றுகளாலும் இந்தக் குதிரையைச் செய்வாங்க. மேலே துணியை உடுத்துவாங்க. இந்தத் துணிகளிலே சின்னச் சின்னக் கண்ணாடித் துண்டுகளையும் பதித்திருப்பது கார்ந்துக்குவாங்க. இங்கே நிக்கறாங்க'' என்றபடி சிரித்தாள் தமிழ்ச் செல்வி.

பொய்க்கால் குதிரைமீது இருந்த ஆண், ராஜாவைப் போல ஒப்பனை செய்துகொண்டிருந்தார். பெண், ராணியைப் போலத் தோற்றமளித்தாள். இருவரும் வட்டமான திசையில் தங்கள் குதிரைகளைச் செலுத்திக் கொண்டிருந்தார்கள். அதாவது, அப்படி பாவனை செய்தபடி ஆடிக் கொண்டிருந்தார்கள்.

இப்போது நையாண்டி மேளத்தின் ஒலி வேகமாக மாறி இருந்தது. ராஜாவும் ராணியும் தங்கள் வலது கையில் ஆளுக்கொரு பெரிய வண்ணத் துணியை எடுத்துக்கொண்டு, அதை



பல திசைகளிலும் ஆட்டிய படியே குதிரைக்குள் ஒயிலாக நடக்கத் தொடங்கினார்கள்.

அவர்களது கால்களில் பெரிய சலங்கைகளைக் கட்டிக்கொண்டு இருந்தார்கள். அவர்கள் ஆடும்போது கூடவே கேட்ட சலங்கை ஒலியானது அந்த நடனத்துக்குத் தனி அழகைக் கொடுத்தது. அதுவரை மெதுவாகச் சென்றுகொண்டிருந்த ராஜாவும் ராணியும் வேகமாக நடக்கத் தொடங்கினார்கள். அந்த வேகத்தில்கூட அழகு இருந்தது. ராஜாவும் ராணியும் ஒருவருக்கொருவர் அருகில் செல்வதும் பின் நகர்வதுமாக ஆடியபோது, கூடியிருந்தவர்கள் கைதட்டினார்கள்.

> **''நம்ம கிராமங்களில் குதிரைகளுக்கு ஒரு தனி இடம் உண்டு. அய்யனார்சாமிகூட குதிரையில் சவாரி செய்வதா சொல்வாங்க''**

''எதற்காக குதிரையை இந்த ஆட்டத்துக்குத் தேர்ந்தெடுக்கணும்?'' என்று கேட்டாள் தமிழ்ச்செல்வி.

துளிகள்...

- **இதை 'புரவி ஆட்டம்' என்றும் அழைப்பர்.**
- **'கதக்' நடனத்தின் சாயல் பொய்க்கால் குதிரையில் உண்டு.**
- **இந்தக் கலை தஞ்சைப் பகுதியில் தொடங்கியதாகக் கூறுகிறார்கள்.**
- **இந்தக் கலையை வளர்த்ததில் மராட்டிய மன்னர்களுக்கு முக்கிய பங்குண்டு!**

''நம்ம கிராமங்களில் குதிரைகளுக்கு ஒரு தனி இடம் உண்டு. அய்யனார்சாமிகூட குதிரையிலே சவாரி செய்வதா சொல்வாங்க. அது இருக்கட்டும். வேற எந்த மிருகம் இருந்தால் இந்த ஆட்டம் இன்னும் நல்லா இருக்கும்னு நினைக்கிறே?'' என்று சிரித்தபடி கேட்டார் சித்தப்பா.

அடுத்தடுத்து பல மிருகங்களை மனத்துக்குள் கொண்டு வந்தான் ரஞ்சன். கடைசியில், ''குதிரைதான் பெஸ்ட் சாய்ஸ்!'' என்றான்.

தொடர்ந்து பொய்க்கால் ஆட்டத்தை ரசித்த அவர்கள், பிறகு அங்கிருந்து நகர்ந்தனர்.

நாட்டுபுறக் கலைகளின் மீது ஆர்வம் என்பதையும் தாண்டி, ஒருவித மரியாதை ரஞ்சனுக்கு ஏற்படத் தொடங்கியிருந்தது.

பட்டியல்

கோகுலம் சிறுவர் சங்கம்



'கோகுலம் சிறுவர் சங்கம்' பட்டியல் இந்த மாதமும் தொடர்கிறது.

இவர்களின் புகைப்படங்கள் இரண்டாவது, மூன்றாவது அட்டைகளில்!

401) மு.நி.சைப்ஹீமைத், ஐந்தாம் வகுப்பு, இந்து கல்லூரி, கொழும்பு.
402) வீ. நந்தினி, மூன்றாம் வகுப்பு, கேந்திரிய வித்யாலயா, சென்னை.
403) ரா.அபிலாஷ், ஐந்தாம் வகுப்பு, அமிர்த வித்யாலயம், கோவை.
404) ம.சுந்தரலெட்சுமி, 7-ஆம் வகுப்பு, மங்கையர்கரசி நடுநிலைப் பள்ளி, மதுரை.
405) ம.சௌம்யா, 6-ஆம் வகுப்பு, மங்கையர்கரசி ந.நி.பள்ளி, மதுரை.
406) பா.நவநீத், எட்டாம் வகுப்பு, மேக்ஸ்வெல் மெட்ரிக் மேனிலைப் பள்ளி, தஞ்சாவூர்.
407) எஸ்.ஸ்ரீராம்நாத், முதலாம் வகுப்பு, தூய அகஸ்டியன் பள்ளி, உள்ளகரம்.
408) க.தீபிகா, எட்டாம் வகுப்பு, புனித பிலோமினாள் மேனிலைப் பள்ளி, திண்டிவனம்.
409) இரா.சிவிசக்கரவர்த்தி, நான்காம் வகுப்பு, செல்லமுத்து கல்வி நிலையம், தாராபுரம்.
410) இரா.அகல்யா, 2-ஆம் வகுப்பு, செல்லமுத்து கல்வி நிலையம், தாராபுரம்
411) மா.பரமசிவம், ஒன்பதாம் வகுப்பு, அரசினர் ஆண்கள் மேனிலைப் பள்ளி, வெண்ணந்தூர்.
412) அ.நிலவர் நிஸா, ஐந்தாம் வகுப்பு, மசூது தைக்கா நடுநிலைப் பள்ளி, கடையநல்லூர்
413) ரா.தரணிதரன், மூன்றாம் வகுப்பு, இன்பேன்ட் பள்ளி, விருத்தாசலம்
414) அ.ஸம்ஹிதா, ஒன்பதாம் வகுப்பு, ஆதர்ஷ் வித்யாலயா, சென்னை
415) பொ.சரவணக்குமார், பத்தாம் வகுப்பு, காமராஜ் மேனிலைப் பள்ளி, நம்பியூர்.
416) டி.சுஸ்மிதா, 8ஆம் வகுப்பு, சி.எஸ்.ஐ.மேனிலைப் பள்ளி, கோவை.
417) வெ.ஜீவானந்தம், பத்தாம் வகுப்பு, காமராஜ் மேனிலைப் பள்ளி, நம்பியூர்.
418) ச.உத்ராதேவி, ஆறாம் வகுப்பு,............., காரைக்குடி.
419) க.பாலாஜி, பன்னிரண்டாம் வகுப்பு, புனித வளவனார் மேனிலைப் பள்ளி, கூடலூர்.
420) பா.மந்த்ரா, ஆறாம் வகுப்பு, கே.எஸ்.வி.எஸ். பள்ளி, கீழ்பாக்கம்.
421) பா.லோகேஷ்வரன், ஏழாம் வகுப்பு, வியாசா வித்யாலயா



மெட்ரிக் மேனிலைப் பள்ளி, சென்னை.

422) ஆ. பிரேம்குமார், 11ஆம் வகுப்பு, அரசு மேனிலைப் பள்ளி, முஞ்சிறை.

423) எஸ்.சுபலஷ்மி, இரண்டாம் வகுப்பு, வினாயகா வித்யாலயா மெட்ரிக் பள்ளி, சேலம்.

424) ஜி.பிரணவ், 2-ஆம் வகுப்பு, இ.எஸ்.மெட்ரிக் பள்ளி, விழுப்புரம்.

425) சி.கோகுலன், ஆறாம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி, கோவை.

426) நா.சுதர்ஷினி, எட்டாம் வகுப்பு, மெதடிஸ்ட் பெண்கள் மேனிலைப் பள்ளி, திருச்சி.

427) கா.அருண்ராஜ், 9ஆம் வகுப்பு, வேலுடையார் மே.நி பள்ளி, திருவாரூர்.

428) எஸ். சந்தானலஷ்மி, ஏழாம் வகுப்பு, ஆஸ்ரம் மெட்ரிக் மேனிலைப் பள்ளி, கோவை.

429) வெ.காமேஷ்குமார், பத்தாம் வகுப்பு, காமராஜ் மேனிலைப் பள்ளி, நம்பியூர்.

430) ஜெ. அரவிந்தன், பத்தாம் வகுப்பு, காமராஜ் மேனிலைப் பள்ளி, நம்பியூர்.

431) தி.நிர்மலாதேவி, ஆறாம் வகுப்பு, மகாத்மா பள்ளி, மதுரை.

432) மு.மணிகண்டன், ஒன்பதாம் வகுப்பு, அரசினர் ஆண்கள் மேனிலைப் பள்ளி, வெண்ணந்தூர்.

433) கு.தமிழ்க்கொடி, எட்டாம் வகுப்பு, ஸ்ரீ மகா கணேசா வித்யாசாலா நடுநிலைப் பள்ளி, சென்னை.

434) கு.தமிழ்ச்சுடர், பத்தாம் வகுப்பு, ஸ்ரீ மகா கணேச வித்யாசாலா நடுநிலைப் பள்ளி, சென்னை.

435) இரா.சேதுபதி, ஆறாம் வகுப்பு, அ.ஆ.மேனிலைப் பள்ளி, மதுக்கூர்.

436) ஜா. நந்தா, எட்டாம் வகுப்பு, பெரியார் மணியம்மை பெண்கள் மேனிலைப் பள்ளி, திருச்சி.

437) மு. உஜைர் அஹமது, பத்தாம் வகுப்பு, வீனஸ் மெட்ரிக் மேனிலைப் பள்ளி, சிதம்பரம்.

438) எஸ்.பி.சங்கீதா, நான்காம் வகுப்பு, என்.வி.கே.எஸ்.மெட்ரிக் மேனிலைப் பள்ளி, ஆற்றூர்.

439) மு.இ.முகம்மது ஜாவித், ஐந்தாம் வகுப்பு, மார்னிங் ஸ்டார் மெட்ரிக் பள்ளி, சோழபுரம்.



440) கு. தமிழ்ச்செல்வன், ஏழாம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி, மே.தி.புலியூர்.

441) என்.மீனாட்சி, 12ஆம் வகுப்பு, ஸ்ரீ வித்யா மந்திர் மேனிலைப் பள்ளி, சேலம்.

442) க.ஆனந்த் ரவிசேகர், ஆறாம் வகுப்பு, வைரம்ஸ் மெட்ரிக் மேனிலைப் பள்ளி, புதுக்கோட்டை.

443) பா.திருவேங்கடலட்சுமி, 8ஆம் வகுப்பு, சிஷ்யா மெட்ரிக் மே.நி பள்ளி, திருவண்ணாமலை.

கோகுலம் சிறுவர் சங்கம் - கூப்பன்

என் பெயர் : ....

வயது : ....

பெற்றோர் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

....

புகைப்படம்

நான் கோகுலம் சிறுவர் சங்கத்தின் உறுப்பினராகச் சேர விரும்புகிறேன். உங்கள் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்கிறேன்.

(கையொப்பம்)

இதுவரை கோகுலம் சிறுவர் சங்கத்துக்கு கூப்பன் அனுப்பாதவர்கள் உடனே அனுப்புங்கள். உங்கள் நண்பர்களுக்கும் விஷயத்தைச் சொல்லி, அவர்களையும் உறுப்பினராக்குங்கள்!

444) ர.ஷஜீ, பத்தாம் வகுப்பு, தூய இருதய உயர்நிலைப் பள்ளி, கடியப்பட்டணம்.

445) இரா. பிரியதர்ஷினி, நான்காம் வகுப்பு, மகரிஷி வித்யாமந்திர், ஓசூர்.

446) க.அஸ்வத், பதினொராம் வகுப்பு, விவேகானந்தா மேனிலைப் பள்ளி, பாண்டமங்கலம்.

447) ரா.தருண் பிரபு, 3ஆம் வகுப்பு, ஸ்ரீ சௌடாம்பிகா கான்வென்ட் மெட்ரிக் பள்ளி, அருப்புக்கோட்டை

448) ஆர்.கீர்த்திகா மைதிலி, லஷ்மிராம் வித்யாலயா பிரைமரி பள்ளி, வத்தலக்குண்டு.

449) ஆர்.சீதாராமன், ஏழாம் வகுப்பு, டி.வி.எஸ்.மேனிலைப் பள்ளி, மதுரை,

450) ஜி.அஜர் அரவிந்த், நான்காம் வகுப்பு, ஏ.ஆர்.எல்.எம்.மெட்ரிக் மே.நி. பள்ளி, கூடலூர்.



வீரா

இதுவரை: தங்கபுரியின் இளவரசன் தங்க முகிலன், குருநாதர் வீரபத்ரனின் குருகுலத்தில் தங்கிப் படிக்கிறான். அங்கே படிக்கும் விதூஷகர் விமலனின் மகன் மாணிக்கம், சூரபத்ரன் என்ற மந்திரவாதியிடம் பழகுகிறான். சூரபத்ரன், மாணிக்கத்திடம் ஒரு பொறுப்பை அளிக்கிறான். அது குறித்து பேசிவிட்டு மாணிக்கம் கிளம்பியபோது அங்கே தந்தை விமலன் வருகிறார். இனி...

தந்தையை அங்கே கண்டதும் மாணிக்கம் திகைத்தான். ''அ...ப்பா... நீ... நீங்கள் எப்படி இங்கே?''

''உன்னைத் தேடிக்கொண்டு குரு குலம் வந்தேன். நீ சுள்ளியெடுக்கச் சென்றதாகக் கூறினார்கள். சுள்ளி எடுக்கும் இடத்துக்குப் போனேன். அங்கே இருந்த உன் நண்பன், நீ இங்கே வந்ததாகச் சொன்னான்'' என்றார் விமலன்.

''என்ன விஷயமப்பா?'' என்று கேட்டான் மாணிக்கம்.

''உன் பாட்டி கடவுளிடம் சென்றுவிட்டாள்'' என்றவர் குரலில் சோகம்.

மேற்கொண்டு எதுவும் பேசவில்லை. இருவரும் குருகுலத்தை அடைந்தார்கள். வீரபத்ரனிடம் சொல்லிவிட்டு கிளம்பினார்கள்.

இரவு...

குருகுலத்தில் எல்லோரும் சாப்பிட்டுப் படுத்துவிட்டார்கள். தங்கமுகிலனும் கேசவனும் படுத்திருந்தாலும் உறங்கவில்லை. மாணிக்கம் பாறைக்குள் மறைந்த காட்சியே மீண்டும் மீண்டும் மனத் திரையில் ஓடியது.

''கேசவா'' என்று கிசுகிசுப்புடன் குரல் கொடுத்தான் முகிலன்.

''என்ன?'' என்று கேட்டான் கேசவன்.

''உறக்கம் வருகிறதா?''

''உறக்கமா? அது எப்படி வரும்? மாணிக்கத்தை நினைத்துக்கொண்டிருக்கிறேன்.''

''எனக்கும் உறக்கம் வரவில்லை. ஒன்று செய்வோமா?''

''என்ன?''

''இப்போது மாணிக்கமும் இல்லை. அங்கே போய்ப் பார்ப்போமா?''

''அங்கே என்றால் அருவிக்கா?''

''ஆமாம்!''

''இந்த நேரத்திலா?''

''ஆமாம்! இதுதான் சரியான நேரம். யாருக்கும் தெரியாமல் சென்று வரலாம்.''

''நமக்கு மட்டுமா சரியான நேரம்... காட்டு விலங்குகளுக்கும்தான்.''

''பயப்படாதே கேசவா! விலங்குகள் குறுக்கிட்டால் அவற்றுக்கு எனது வில்லால் பதில் சொல்கிறேன். வா, போகலாம்'' என்ற முகிலன் எழுந்தான். வில்லையும், அம்புகள் நிறைந்த குழல் வடிவ பெட்டியையும் எடுத்துக்கொண்டான்.

கேசவன் ஒரு தீப் பந்தத்தை எடுத்துக் கொள்ள, இருவரும் சத்தம் காட்டாமல் குருகுலத்தை விட்டு வெளியே வந்தார்கள். இரவு நேரத்து காடு, கனமான இருட்டுப் போர்வையைப் போர்த்தியிருந்தது. மூன்றாம் பிறை நிலவால் அடர்த்தியான மரங்களை மீறி பூமிக்கு வெளிச்சத்தினைத் தர முடியவில்லை. நரியின்

வாண்டுதாசன்

சூரா

3

ஊளைச் சத்தமும் மிருகங்கள் நடமாடும் காலடிச் சருகுகள் சத்தமும் தெளிவாகக் கேட்டன.

''முகிலா, அங்கே போய் என்ன தேடப் போகிறோம்?''

''தெரியவில்லை. ஆனால், இப்போது அங்கே போனால் ஏதோ கிடைக்கப் போகிறதென உள் மனம் சொல்கிறது.''

''என் உள்மனம் என்ன சொல்கிறது



தெரியுமா? ஏதோ ஆபத்தில் அகப்படப் போகிறோம் என்கிறது''

''கேசவா! உனக்குப் பயமாக இருந்தால் திரும்பிப் போய்விடு.''

''சே! வருங்காலத் தளபதிக்குப் பயமா? திட்டம் வகுத்து பிறகு போகலாமே என்று சொல்ல வந்தேன். சரி! சரி வா'' என்றான் கேசவன்.

இருவரும் வேகமான நடையில் அருவியை நெருங்கினார்கள். அங்கே தண்ணீர் பருகிக்கொண்டிருந்த ஒரு நரி, வெளிச்சத்தைக் கண்டதும் ஓட்டமெடுத்தது. ஆந்தை ஒன்று 'படபட'வென சிறகை அடித்தவாறு ஒரு மரத்திலிருந்து அடுத்த மரத்துக்கு மாறி, கிளையில் அமர்ந்து இவர்களையே வெறித்தது.



முகிலனுக்கு வைத்த குறி தவறியதால் கோபமாகத் திரும்பிய வெளவால், கேசவனை நோக்கி வந்தது.

முகிலன் அந்தப் பாறையை நெருங்கி, தொட்டுப் பார்த்தான். சுற்றிலும் பார்வையை வீசி, ஏதாவது தடயம் தென்படுகிறதா என்று தேடினான். தண்ணீர் குடிக்க வந்த பல்வேறு மிருகங்களின் காலடித் தடயங்கள் தவிர வேறு எதுவும் கிடைக்கவில்லை.

''முகிலா, இது வீண் வேலை! தவிர இதில் மந்திரம், மாயாஜாலம் சம்பந்தப்பட்டிருக்கிறது. ஆகவே, தாமதிக்காமல் இங்கிருந்து செல்வதே நல்லது. அதோடு, இதைப் பற்றி குருநாதரிடம் பேசிவிடுவதும் நல்லதென நினைக்கறேன்'' என்றான் கேசவன்.

சற்றே யோசித்த முகிலன், ''நீ சொல்வதும் சரிதான். நம்மால் மாணிக்கத்துக்குக் கெடுதல் வந்துவிடுமோ என்றுதான் தயங்கினேன். ஆனால், இதைச் சாதாரணமாக விட்டுவிட்டால், நாளை விபரீதமாக ஏதாவது நடந்தால் அதற்கு நாமும் பொறுப்பாளியாவோம். சரி! வா, போகலாம்'' என்றான் முகிலன்.

இருவரும் திரும்பி நடந்தார்கள். பத்தடி தூரம்தான் நடந்திருப்பார்கள். பின்னால் ஏதோ சத்தம் கேட்டு திரும்பினார்கள். அடுத்த நொடி திகைத்துப் போனார்கள். அங்கே வெளவால் ஒன்று இருந்தது.

வெளவால் என்றால் சாதாரணமாக நாம் பார்க்கும் உள்ளங்கை அளவு வெளவால் கிடையாது. நான்கடி உயரம் இருந்தது. தரையிலிருந்து சில அடி உயரத்தில் அந்தரத்தில் இறக்கைகளை விரித்த நிலையில் இருந்தது.

அந்த இறக்கைகள் ஒவ்வொன்றும் யானையின் காதைவிட இரண்டு மடங்கு இருந்தன. இருவரையும் அது முறைத்துப் பார்த்த விதம் உடம்பை நடுங்க வைத்தது.

''மு...முகிலா, இதென்னடா...?''

''மெதுவாக பின்னால் வா'' என்ற முகிலன் அந்த வெளவாலைப் பார்த்தவாறு, பின்னோக்கி நடந்தான்.

அப்படி நடக்கும்போதே ஓர் அம்பை எடுத்து, வில்லில் பூட்டினான். அதுவரை அசையாமல் இருந்த வெளவால், மின்னல் வேகத்தில் அவனை நோக்கிப் பறந்து வந்தது. முகிலன் சட்டென தரையில் விழுந்து உருண்டான். சற்று தாமதித்து இருந்தாலும் வெளவாலின்



"என் கையிலிருந்த வில்லும் இருட்டில் எங்கோ விழுந்துவிட்டது. ஆயுதம் எதுவுமில்லாமல் எதிர்ப்பது மடத்தனம்"

இறக்கை, அவன் கன்னத்தைப் பதம் பார்த்திருக்கும்.

முகிலனுக்கு வைத்த குறி தவறியதால் கோபமாகத் திரும்பிய வௌவால், கேசவனை நோக்கி வந்தது. அவன், கையிலிருந்த தீப் பந்தத்தினை அதன் மீது வீசினான். அது சாமர்த்தியமாக விலகியது. தீப் பந்தம் கீழே விழுந்து அணைந்தது.

அதனால் அங்கே இருள் சூழ்ந்தது. வௌவாலின் கண்கள் மட்டும் நெருப்புக் கங்குகளைப் போல் தெரிந்தது.

''கேசவா எங்கே இருக்கிறாய்?'' என்று கேட்டான் முகிலன்.

''இங்கேயேதான் நிற்கிறேன்'' என்றான் கேசவன்.

''என் கையிலிருந்த வில்லும் இருட்டில் எங்கோ விழுந்துவிட்டது. ஆயுதம் எதுவுமில்லாமல் எதிர்ப்பது மடத்தனம். மெதுவாக இப்படி வா. என் கையைப் பிடித்துக்கொள்'' என்றான் முகிலன்.

கேசவன் இருட்டில் கைகளை வீசிய வாறு நகர்ந்து வந்தான். முகிலன் தட்டுப் பட்டான். அவன் கையைப் பிடித்துக் கொண்டவன் கேட்டான். ''அடுத்து என்ன செய்வது?''

''ஓட வேண்டும்.''

''ஓடினால் அது துரத்துமே முகிலா!''

''வேறு வழியில்லை. இப்படியே இருந்தாலும் கண்டுபிடித்துத் தாக்கும். முடிந்தவரை ஓடி, போக்கு காட்டுவோம். எக்காரணம் கொண்டும் கையை விட்டு விடாதே. தனித் தனியாகப் பிரிந்து விட்டால் கஷ்டம்'' என்றான் முகிலன்.

அந்த இருட்டில் காட்டின் மேடு-பள்ளங்களில், காலடியில் சருகுகள் மிதிபட, இருவரும் புயல் வேகத்தில் ஓடினார்கள். வௌவால் ஆவேசத்துடன் துரத்தியது.

(தொடரும்)

சாதனைத் தளிர்கள்

பெரிய நகரம் முதல் குக்கிராமம் வரையிலுள்ள இளம் சாதனையாளர்களை வெளிச்சமிட்டுக் காட்டும் பகுதியிது. விளையாட்டு,



பேச்சு, ஓவியம் என எதுவாக இருந்தாலும் சரி, அவற்றில் மாவட்ட அளவிலோ, மாநில அளவிலோ கலந்துகொண்டு பரிசு பெற்றிருந்தால் அது குறித்த விவரங்கள், புகைப்படம், சான்றிதழின் நகல் ஆகியவற்றை அனுப்புங்கள். சிறந்தவை வெளியாகும். கோகுலம் சார்பாகவும் அவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பரிசு அளிக்கப்படும்.

மறக்காமல் பள்ளி, வீட்டு முகவரியைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். முக்கியமான நிபந்தனை, அந்தச் சாதனை, கடந்த ஓராண்டுக்குள் நிகழ்த்தப்பட்டதாக இருக்க வேண்டும். பழையது வேண்டாம்!

அனுப்ப வேண்டிய முகவரி :

கோகுலம்,
சாதனைத் தளிர்கள்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032.

ஓவிய பாரதன்!



திருவாரூர், வ.சோ.ஆண்கள் மேனிலைப் பள்ளியில் ஏழாம் வகுப்பு படிப்பவர் தி.க.தமிழ்பாரதன். பேச்சு, கட்டுரை, கவிதைப் போட்டிகளில் மாவட்ட அளவில் பரிசுகளை வென்றுள்ளார். திருச்சி வானொலியில் 'விஞ்ஞான விநோதங்கள்' என்ற நிகழ்ச்சியையும் நடத்தியுள்ளார். தமிழ்நாடு வனத்துறையின் ஓவியப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றுள்ளார். ஓவிய பாரதனின் சாதனைகள் தொடர கரவொலி எழுப்புவோம்!







संस्कृतभारती तमिलनाडु ट्रस्ट

SAMSKRITA BHARATI TAMILNADU TRUST

बालभारती परीक्षा

BALABHARATI PARIKSHA

प्रमाणपत्रम्

we are pleased to certify that Sri ....R. MATHIVATHANA... has successfully completed Latika examination held by Samskrita bharati in ....2007.... securing DISTINCTION class.

State Secretary Co-ordinator

லத்திகா மதி!





விருதுநகர், பி.எஸ்.சி. பள்ளியில் ஏழாம் வகுப்பு படிப்பவர் இரா.மதிவதனா. சமஸ்கிருதம் வகுப்பில் பயிலும் இவர் 'லத்திகா' தேர்வில் தனிச்சிறப்பு (Distinction) பெற்று, அனைவராலும் பாராட்டப்பட்டுள்ளார். கோகுலம் சார்பில் நாமும் மதிவதனாவுக்குப் பாராட்டுகளைத் தெரிவிப்போம்!

திருக்கழுக்குன்றம், பாரதி வித்யாலயா பள்ளியில் மூன்றாம் வகுப்பு படிப்பவர் திரிபுரசுந்தரி. பேச்சுப் போட்டி, மாறுவேடப் போட்டியென பல்வேறு போட்டிகளில் பங்கேற்று, பரிசுகளைப் பெற்றுள்ளார். 'திருக்கழுக்குன்றம் தமிழ்ச் சங்கம்' சார்பில் நடைபெற்ற திருப்பாவை மற்றும் திருவெம்பாவை ஒப்புவித்தல் போட்டியிலும் கலந்து கொண்டு சான்றிதழ் பெற்றுள்ளார். சுட்டி சுந்தரி மேலும் பல சாதனைகளைப் படைக்க வாழ்த்துவோம்!



சுட்டி சுந்தரி!



கழுக்குன்றத் தமிழ்ச் சங்கம்

பாராட்டிதழ்



நசிந்தோ, அல்லது பல இடங்களில் காணாமல் போய்விட்ட கலைதான் பொம்மலாட்டம்! இந்தக் கணினி யுகத்திலும் அதன் அருமையை அற்புதமாகப் படம் பிடித்துக் காட்டிவிட்டது அருண்சரண்யாவின் பொம்மலாட்டம்!

- ஆர்.ஆர்.உமா, பத்தாம் வகுப்பு,
ஸ்ரீ ராமகிருஷ்ண பள்ளி,
திசையன்விளை,

மாணவப் பத்திரிகையாளர் திட்டம்



மகிழ்ச்சி அளிக்கிறது. விடுமுறையைப் பயனுள்ளதாக்க கோகுலம் எடுக்கும் முயற்சிக்கு பாராட்டுகள்!

- த.சந்தனக்குமார்,
எட்டாம் வகுப்பு,
ஜான்சேவியர் பள்ளி,
பாளையங்கோட்டை

அவரவர் கடமைகளை ஒழுங்காகச் செய்தாலே அகமும் புறமும் நன்றாக இருக்கும் என்பதை 'மிட்டாய் கடையில் மிட்டு' கதை உணர்த்தியது!

- ஆர்.கே.கார்த்திக், எட்டாம் வகுப்பு,
ஸ்ரீ ராமகிருஷ்ணா பள்ளி,
திசையன்விளை

'துணைக்கு வந்த தோழன்' சிறுகதை என்னைப் போன்ற சிறுவர் - சிறுமியருக்கு தன்னம்பிக்கை வளர, தைரியம் பிறக்க, அற்புதமான சிந்தனையை வழங்கியது!

- மு.சிவரஞ்சனி,
உறுப்பினர் எண்: 179,
ஸ்ரீ மகாதேவ குருஜி மெட்ரிக்
மேல்நிலைப் பள்ளி,
வலங்கைமான்

மார்ச் 2008 இதழில் 57ஆம் பக்கத்தில் வெளியான 'ஒரு விழா' செய்தியில் திருத்தம். வள்ளியப்பா சிலையைத் திறந்து வைத்தவர், இராயவரம் சு.கதி. காந்தி உயர்நிலைப் பள்ளித் தலைவர் எம்.ஏ.எம், பழனியப்ப செட்டியார் அவர்கள்.

- தேவி நாச்சியப்பன், காரைக்குடி

'பரிசுப் பெட்டி' பகுதி மிகவும் மகிழ்ச்சியை அளிக்கிறது. இதனால் நாங்கள் புத்தகங்களைத் தேடி எடுத்துப் படிக்க ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது.

- எம்.ஆஷிக் அஸ்வின்,
ஐந்தாம் வகுப்பு,
மகாத்மா மான்டிசோரி
மெட்ரிகுலேஷன் பள்ளி, மதுரை



பெயர் : ....

முகவரி : ....

....


....

....

ஒரு வருட சந்தா ரூ. 96/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். உள்ளூர் காசோலைகள் மட்டுமே ஏற்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்,) கல்கி பில்டிங்ஸ், 47-N.P, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032



* தாதாபாய் நௌரோஜி

இந்தியாவின் மேற்குப் பகுதியில் அரபிக் கடலை ஒட்டி அமைந்துள்ள மாநிலம் குஜராத். பஞ்சாப் வழியாக வந்த கூர்ஜா இனத்தினர் வசித்த பகுதியே பின்னர் 'குஜராத்' என்று மாறிய தாக வரலாற்று ஆசிரியர்கள் சொல்கிறார்கள். குஜராத் பற்றியும், அதன் ஒரு பகுதியான சௌராஷ்டிரா பற்றியும் புராணங்களில் குறிப் பிடப்பட்டுள்ளது. பகவான் கிருஷ்ணர் ஆட்சி புரிந்த துவாரகா, குஜராத்தில்தான் இருக்கிறது. மௌரியர்கள், குப்தர்கள் என்று பல்வேறு அரச

தேசத் தந்தையைத்

பரம்பரையினர் ஆண்ட குஜராத், பதிமூன்றாம் நூற்றாண்டில் அல்லாவுதீன் கில்ஜியின் கீழ் வந்தது. அடுத்த நானூறு ஆண்டுகள் முஸ்லிம் மன்னர்கள் ஆட்சி செய்தார்கள். அதன் பிறகு ஆங்கிலேயர்கள் ஆண்டனர்.

இந்தியாவின் முதல் சுதந்திரப் போரின்போது குஜராத்தில் பிரிட்டிஷ் எதிர்ப்பு பெரிய அளவில் இல்லை. மக்களின் சுதந்திர உணர்வைத் தட்டி எழுப்பிய முதல் மனிதர் என்ற பெருமைக்கு உரியவர் 'தாதாபாய் நௌரோஜி'. பிறகு, காந்திஜி தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பினார். அவரது தலைமையில் நாடே சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்டபோது, குஜராத்தும் அந்த நீரோட்டத்தில் கலந்தது. காந்திஜி குஜராத் மாநிலத்தின் அகமதாபாத் நகரை ஒட்டி, சபர்மதி



* துவாரகா



கௌதம்ராம்

நதிக்கரையில் ஒரு ஆசிரமம் அமைத்து, தமது தேசப் பணியை ஆரம்பித்தார். 1930ஆம் ஆண்டு, மார்ச் 12ஆம் தேதி, சபர்மதி ஆசிரமத்திலிருந்து தண்டிக்கு யாத்திரை சென்று உப்புக் காய்ச்சியது, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தையே உலுக்கிய சரித்திர நிகழ்ச்சியாகும்!

ஒரு லட்சத்து 96 ஆயிரம் சதுர கி.மீ. பரப்பளவு கொண்ட குஜராத் மாநிலம், வடக்கில் பாகிஸ்தான் எல்லையை ஒட்டி அமைந்துள்ளது. மேற்கே அரபிக்கடலும், வடக்கே ராஜஸ்தான் மாநிலமும், கிழக்கில் மத்திய பிரதேசமும்,

தந்த மண்!



தென் கிழக்கே மகாராஷ்டிராவும் உள்ளன. குஜராத் மாநிலத்தை ஒட்டி அமைந்துள்ள கடற்கரையின் நீளம் 1600 கி.மீ. இது இந்தியாவின் மொத்த கடற்கரையின் நீளத்தில் மூன்றில் ஒரு பங்கு. குஜராத், சௌராஷ்டிரா, கட்ச் என்று மூன்று பகுதிகளைக் கொண்டது குஜராத் மாநிலம்.

இந்தியா சுதந்திரம் அடைந்தபோது குஜராத் தனி மாநிலமாக இல்லாமல், மகாராஷ்டிராவுடன் இணைந்து இருந்தது. ஆனால், குஜராத் தனியொரு மாநிலமாக இருந்தால்தான் வேகமாக முன்னேறும் என்று கருதிய சில குஜராத்தி பிரமுகர்கள், அதற்கான முயற்சியில் இறங்கினார்கள். 1960ஆம் ஆண்டு, மே மாதம்,



முதல் நாளன்று குஜராத் தனி மாநிலமாக உதயமாயிற்று. அதனைத் தொடர்ந்து மிகச் சிறப்பாகத் திட்டமிட்டு, உருவாக்கப்பட்ட நகரமான 'காந்தி நகர்' மாநிலத்தின் தலை நகரமானது.

பதினெட்டாயிரத்துக்கும் அதிகமான கிராமங்கள், 250 நகரங்கள் கொண்ட குஜராத் மாநிலம், இருபத்தாறு மாவட் டங்களைக் கொண்டது. அகமதாபாத், வடோதரா (பரோடா), பாவ்நகர், புஜ், சூரத், ஜாம்நகர், கண்ட்லா, மெசானா, போர்பந்தர், ராஜ்கோட், அம்ரேலி, ஜுனாகத் போன்றவை குஜராத் மாநிலத்தின் முக்கிய நகரங்கள். நர்மதா, சபர்மதி, தப்தி ஆகியவை குஜராத்தின் முக்கிய நதிகளாகும்.

குஜராத்தின் 'கட்ச்' வறண்ட பகுதியாகும். ஜுனாகத் பகுதியில் உள்ளது கிர் காட்டுப் பகுதி. இங்குள்ள சிங்கங்களின் சரணாலயம் புகழ் பெற்றது. குஜராத், எண்ணெய் மற்றும் இயற்கை வாயு வளம் மிகுந்த ஒரு மாநிலம். 'அங்கலேஷ்வர்' பகுதியில் மட்டும் பூமிக்கு அடியில் 46 மில்லியன் டன் கச்சா எண்ணெய் இருப்பதாக புவியியல் வல்லுனர்கள் தெரிவிக்கிறார்கள். தவிர சுண்ணாம்புக் கல், மாங்கனீஸ், லிக்னைட், ஜிப்சம், டாலமைட், சிலிகான் என்று ஏராளமான கனிம வளம் கொண்ட மாநிலம் குஜராத்.

மக்களின் பிரதான மொழி குஜராத்தி. எனினும், அனைவருக்கும் இந்தி மொழி தெரியும். உருது, சிந்தி ஆகியவை மற்ற முக்கிய மொழிகள். குஜராத்தி இலக்கியம் பழமையான பாரம்பரியம் கொண்டது. குஜராத் பண்டிகைகளுக்கும் பெயர் போனது. ஆண்டுதோறும் ஜனவரி மாதம் 14ஆம் தேதி, மகர சங்கராந்தி சமயத்தில் நடை பெறும் 'காற்றாடித் திருவிழா' உலகப் புகழ் பெற்றது. கடந்த இருபது ஆண்டுகளாக குஜராத் மாநில சுற்றுலா வளர்ச்சிக் கழகம், இதனை ஒரு அகில உலக காற்றாடித் திருவிழாவாக பிரம்மாண்டமான வகையில் ஏற்பாடு செய்து வருகிறது. அதில் உலகின் பல்வேறு நாடு களிலிருந்து காற்றாடிப் பிரியர்களும், ரசி கர்களும் கலந்துகொள்கிறார்கள்.



குஜராத்தின் இன்னொரு முக் கிய பண்டிகை நவராத்திரி. அப்போது, குழந்

தைகள் முதல் முதியவர்கள் வரை கோலாகலமாக நவராத்திரியைக் கொண்டாடுகிறார்கள். சிறு கிராமங்கள் முதல் தலைநகரம் வரை, மாநிலம் எங்கும் இரவு நேரங்களில் நடுநிசியையும் தாண்டி ஆண்களும், பெண்களும் நடனமாடி மகிழ்வார்கள்.



காற்றாடி திருவிழா

சோமநாதபுரம் கோயில், மாதேரா சூரியன் கோயில், காந்தி நகரில் உள்ள அக்ஷர்தாம் சௌம்யநாராயணர் கோயில் போன்றவை பார்க்க வேண்டிய கோயில்கள். போர்பந்தரில் உள்ளது காந்தி கீர்த்தி மந்திர். இந்த வளாகத்தில் மகாத்மா காந்தி பிறந்த வீடும், அவர் புகழ்பாடும் மந்திரும் உள்ளன. காந்திஜி பிறந்த வீட்டுக்குப் பின் தெருவில் அன்னை கஸ்தூர்பா பிறந்த வீடு உள்ளது. இந்த இரு வீடுகளும் இந்திய தொல்பொருள் ஆய்வுத்துறையின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன.

சூரத் நகரம் ஜவுளி ரகங்களுக்குப் புகழ் பெற்றது. வைரங்களுக்குப் பட்டை தீட்டும் தொழிலும் இங்கு நடைபெறுகிறது. 'சாபுதாரா' குஜராத்தின் பிரபலமான கோடை வாசஸ்தலம். 2001ல், பூகம்பத் தாக்குதல் காரணமாக கடும் பாதிப்புக்குள்ளான பகுதிகளுள் முக்கியமானது புஜ். கட்ச் மாவட்டத்தின் தலைநகரமான புஜ், தற்போது பூகம்ப பாதிப்பு தெரியாதபடி பொலிவு பெற்று நிற்கிறது. ●

சூரியன் கோயில்



குட்டீஸ் கோகுலம்

இரண்டு படங்களுக்கிடையே எத்தனை வித்தியாசங்கள் உள்ளனவென்று கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்!



வித்தியாசங்களைக் கண்டுபிடி!



விடைகள்: 1.தரையில் பூக்கள், 2. துடுப்பின் நிறம், 3. வண்ணத்துப் பூச்சிகளின் எண்ணிக்கை, 4. புறக்கள், 5. தொப்பி

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


426


427


428


429


430


431


432


433


434


435


436


437


438


439


440


441


442



443



444


445


446


447


448


449


450

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN/CC(S)DN/109/06-08 • Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/47/06-08 • Registered as a Newspaper in Srilanka

